ஆதாரக்கல்வி

கல்வி 7 நவம்பர், டிசம்பர் 1954 கலைகள் 7 & 8

ஆண்டு சந்தா 3-0-0

தனிப் பிரதி 0-4-0

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆரம்பக்கல்வி சீர்திருத்தம் —தலையங்கம்	1
2.	கல்விப் பிரச்னை சர்ச்சை	3
3.	ஆரம்பக் கல்வி கமிட்டி	5
4.	உபநிஷதச் சிறு கதைகள் —"ஆசி"	9
5.	ஆதாரக்கல்வியும் பூதான யக்ஞமும்	13
6.	ஏர் முனையிலே —திரு. இராம சொக்கலிங்கம், தருமபுரம்.	16
7.	3-ல் 1 பங்கு ஆரம்பப்பள்ளி ஆதாரப்பள்ளிகளாக மாற்ற யோசனை	18
8.	பாடசாலைகளில் தேர்வு பரீட்சைகள் நீடிக்கும்	20
9.	செகண்டரி பரிக்ஷை மார்ச் 1955	21
10.	ஜென்மாந்திரம் (சமூக நாடகம்)	23
12.	செங்கற்பட்டு ஜில்லா ஆரம்ப ஆசிரியர் யூனியன் சிறப்புக் கூட்டம்	அட்டை 2
13.	ஆதாரக்கல்வி 10-வது மகாநாடு சிபாரிசு விவரம்	அட்டை 2
19.	யார் தொண்டன்	அட்டை 4

ஆதாரக்கல்வி காரியாலயம்

87, ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1

செங்கற்பட்டு ஜில்லா ஆரம்ப ஆசிரியர் யூனியன் சிறப்புக் கூட்டம்.

28-11-54 பிற்பகல் 4-மணிக்கு சைதாப்பேட்டை ஆசிரியர்பயிற்சிக் கல்லூரியில் உயர்திரு. R. கோவிந்தராசலு நாயுடு அவர்கள் ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதை பாராட்ட உயர்திரு. T. புருஷோத்தமம் M.L.C. அவர்கள் தலைமையில் செங்கற்பட்டு ஜில்லா ஆ. ஆ. யூனியன் பிரதிநிதிகளால் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அது காலை செங்கற்பட்டு மாவட்ட கழக உறுப்பினர்கள் பலரும், ஆசிரியர் பால் பரிவு கொண்ட சில சட்ட சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். யூனியன் தலைவரும் முன்னாள் சட்ட சபை உறுப்பினருமான உயர் திரு. S. K. கோவிந்தராசலு நாயகர் அவர்கள், மாவட்டக் கழகத் தலைவர் உயர் திரு. R. கோவிந்தராசலு நாயுடு அவர்களுக்கு பாராட்டுபத்திரம் வாசித்தளித்தார். பின்னர் யூனியன் உபதலைவர் திரு. A. இராதாகிருஷ்ணன் அவர்கள் ஜில்லா போர்டு தலைவரவர்களுக்கு ஒரு பத்திரம் வாசித்துக் கொடுத்தார். அதில் கீழ்கண்ட விஷயங்கள் குறிப்பிட்டார்.

1. ஜில்லா போர்டுக்கென ஒரு கல்வி அதிகாரி ஏற்படுத்துதல். 2. ஆசிரியர் குடும்ப நலனுக்கு **Mutual Benefit Scheme Fund** ஒன்று ஏற்படுத்துதல். 3. கைத்தொழில் ஆசிரியருக்கு நிறுத்தப்பட்டுள்ள பஞ்சப் படியை நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து கொடுத்து முழு நேர ஊழியராக்குதல். 4. P. F. கடன் கோரினால் தடையின்றி கொடுத்து உதவுதல். 5. ஆசிரியர் வேலையைவிட்டு விலகும்போது அவருக்கு கொடுக்கப்பட்டுவந்த கிராஜுடி தனி அதிகாரி காலத்தில் நிறுத்தப்பட்டதால் அதை பழையபடி கொடுத்தல். 6. பெருக்குபவன், ஆயாள் நியமித்தல். 7. சிறவிடுதியைத் தவிர இதர லீவு எடுப்பவர்கள் விடுதி நாட்கள் முடிந்தாலும் அலுவலக உத்திரவு இன்றி பள்ளியில் சேர்த்துக் கொள்ளக்கூடாதுஎன்ற உத்திரவை மாற்றி தலைமை ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ள அனுமதித்தல். 8. வெளியூரிலிருந்து வர அனுமதியளித்தல். 9. பள்ளியில் களவு போன சாமான்களின் கிரயத்தை பள்ளி ஆசிரியரிடமிருந்து வசூலிக்காதிருத்தல். 10. சாதல்வார், அஞ்சல் தொகையை உயர்த்தல். 11. தலைவர் அவர்களை அடிக்கடி சந்தித்துப் பேச வாய்ப்பு அளிக்கவும், பயிற்சி வகுப்புகள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யவும் கோருதல் முதலியனவாகும்.

பின்னர் சில ஆசிரியர்களும், நண்பர்களும் பேசினர். முடிவாக செயலாளர் திரு. C. பாலசுப்பிரமணியம் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டு எல்லோருக்கும் தேநீர் உபசரிப்பு நடத்தப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

ஆதாரக்கல்வி 10வது மகாநாடு சிபாரிசு விவரம்

ஸனோஸரா (சௌராஷ்டிரம்)

கிராமங்களை இந்தியாவின் சமூக, கலாசார, பொருளாதார உறுப்புகளாக அபிவிருத்திசெய்ய வேண்டுமென்று இங்கு கூடியுள்ள அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாடு இன்று சிபாரிசு செய்தது.

கல்வித் திட்டம் முழுவதும் முக்கியமாக உயர்தரக் கல்வி கிராம அபிவிருத்தியையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று மகாநாடு சிபாரிசு செய்துள்ளது. மகாநாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள 10 கமிட்டிகளில் ஒரு கமிட்டியே இவ்வாறு சிபாரிசு செய்துள்ளது. கல்விக்காக நாட்டில் ஏற்படுத்தப்பட்ட நயி தாலிம் ஸ்தாபனத்தின்

(பக்கம் 2-ல் பார்க்க)

ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 7 | ஜய, கார்த்திகை— நவம்பர் டிசம்பர் 1954 | கலைகள் 7 & 8

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் அமைத்த கமிட்டியில், ஆரம்ப ஆசிரியர் சங்கம், தென்னிந்திய ஆசிரியர் சங்கம் முதலியனவற்றிலிருந்து ஒரு பிரதிநிதியாவது நியமிக்கப்படாதது ஒரு குறைதான். சர்க்கார் இதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் ஆரம்ப ஆசிரியர்கள் இதைப் பெருங் குறையாகத்தான் நினைக்கிறார்களென்பதை கல்வியாளர்கள் அறிய விரும்புகிறோம்.

ஆரம்பக்கல்வி பாட திட்டத்தையொட்டிய விஷயங்களைத்தான் இக்கமிட்டியார், கவனிப்பார்களென்று எண்ண இடமுண்டு. ஆனால், எந்த புதிய திட்டமும் வெற்றி பெறவேண்டுமானால், நிர்வாக வித்தியாசமின்றி தகுதிக்குத்தக்கவாறு ஒரேவித சம்பள விகிதத்தை நிர்ணயித்து கணிசமான நிதியையும் ஒதுக்கி, ஆசிரியர்களுடைய முன்னேற்றத்திலும் சர்க்கார் கண்ணும் கருத்துமாக இருத்தல் மிக மிக அவசியம் என்பதை வற்புறுத்தல் வேண்டும் என்று கமிட்டி அங்கத்தினர்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

சாதாரணப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக கூடிய சீக்கிரத்தில் மாற்றுவதற்குரிய ஆலோசனைகள் கமிட்டியார் சிபார்சு செய்தாலொழிய, கிராமங்களை, வறுமையிலிருந்தும் கொடிய பிணிகளிலிருந்தும் மீட்கப்பட்டு, ஜனநாயகத்திற்கே முதுகெலும்பாக உள்ள கிராமங்களை முற்போக்கில் வைக்கும் சேவையாகாது என்பதையும் டாக்டர் அழகப்பா அவர்களையும், அன்னாரின் கமிட்டி சகாக்களையும் ஞாபகப்படுத்துகிறோம்.

அலுவல்களைப் பரிசீலனை செய்வதற்கே மேற்கூறிய 10 கமிஷன்களும் ஏற்படுத்தப்பட்டன.

நயீம் தாலீம் வேலை செய்வதில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. அகில இந்திய அடிப்படையில் ஒரு விசேஷ கமிஷனை ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் அமைக்க வேண்டும் என்றும், அதன் அறிக்கை தாலிமி சங்கத்தின் அடுத்த மகாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டது.

பூர்வாங்க ஆதாரக் கல்வி

வருங்காலத்தில் வகுப்பு வாதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு 7 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அவர்கள் இளம் மனதில் நன்கு பதியும்படி கல்வித் திட்டம் அமையவேண்டும் என்று ஆதாரக் கல்விக் கமிஷன் வற்புறுத்தியுள்ளது. இந்நோக்கத்துடன் பரிசோதனைகள் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இதற்கான பயிற்சி செலவு முதலிய அம்சங்கள் பற்றி விவாதிக்கப் பட்டது.

சுயதேவைப் பூர்த்தி லட்சியத்தையும் குறிப்பிட்டுள்ளது. சிறிய குடிசை கைத்தொழில்கள் பற்றியும் அவைதான் தேசிய பொருளாதாரத்திற்கு உகந்தவை என்றும் ஆதாரப் பள்ளிக்கூடங்களில் இவை போதிக்கப்படவேண்டும் என்றும் சிபாரிசு செய்துள்ளது.

நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகையில் கிராமங்களில் சமூக, கலாசார பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப அமையவேண்டும் என்றும் கமிஷன் கூறியுள்ளது,

முதியோர் கல்வி

முதியோர் கல்வி பற்றி குறிப்பிடுகையில் இது பூதானம், கதர், கிராமக் கைத்தொழில்கள், கிராம சுகாதாரம் முதலியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பூதானத்தின் முக்யத்வம் பற்றி குறிப்பிடுகையில் இது கல்வித் திட்டத்தின் பல பகுதிகளுடன் இணைக்கப் படவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

ஆதாரக் கல்வி பிற்பகுதி திட்டம் பற்றி பிரஸ்தாபிக்கையில், தன்னம்பிக்கையுள்ள, சம நோக்குள்ள தனி நபரும், சமுதாயமும் உருவாகும் வகையில் திட்டம் அமையவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் பயிற்சி பற்றியும் கமிஷன் பரிசீலனை செய்துள்ளது. ஒழுக்கத்திற்கு இடமளிப்பதன் அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. உயர்ந்த இலக்கியம் கலை முதலியவற்றை தெரிந்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.

நயீ தாலீம் அடிப்படையில் சர்வகலாசாலை படிப்பு பற்றியும் மகாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டது.

கல்விப் பிரச்னை சர்ச்சை

உயர்தர படிப்பின் சீரமைப்பைப் பற்றி இப்பொழுது நமது ராஜ்யத்தில் ஒரு சர்ச்சை நடந்து வருகிறது. ஹைஸ்கூல் படிப்பை இன்னும் ஒரு வருஷம் கூடுதலாக்க வேண்டும் என்று சென்னை சர்வகலாசாலை தீர்மானித்திருப்பதைப் பற்றியே விவாதம் நடக்கிறது. சர்வகலாசாலையின் இந்த முடிவை அனுபவம் மிகுந்த பிரின்ஸிபல் பாயிட், ஹெட்மாஸ்டர் குருவில்லா ஜேகப் போன்றோர் எதிர்க்கிறார்கள். தாபமின்றி, நுணுக்கமான சாதக பாதக ஆராய்ச்சியுடன் பரிசீலனை நடைபெறுவது விரும்பத்தக்கதே. டில்லியில் ஒரு முக்கியமான அகில இந்தியக் கல்வி மகாநாடு கூடவிருக்கிறது. அதில் ஹைஸ்கூல் படிப்பின் சீரமைப்பு விஷயம் விரிவாகக் கவனிக்கப்படும். டாக்டர் லக்ஷ்மண ஸ்வாமி முதலியாரைத் தலைவராகக் கொண்ட செகண்டரி கல்விக் கமிஷன் சிபாரிசுகளை அமல் நடத்துவது பற்றி அதில் கவனிக்கப்போகிறார்கள். சென்னை ஸர்வகலாசாலை செய்துள்ள முடிவும் அதை ஒருவாறு கருத்திற்கொண்டது. பரிசீலனை நடைபெறுகையில் சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒரு முக்கியமான விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். சென்னை ஸர்வகலாசாலையின் முடிவு இறுதியானது, மாற்ற இயலாதது என்று நினைப்பது தவறு. புது ஆலோசனைகளின் விளைவாக, நிலைமையை மொத்தமாக நிதானித்து, சர்க்கார் செய்யக்கூடிய மதிப்பீடுகளை கருத்திற்கொண்டு, மறு பரிசீலனை செய்வது அவசியமாயின் அதற்கு இணங்க டாக்டர் ஏ. எல். முதலியார் மறுக்கமாட்டார் என்று நினைக்கிறோம். சென்னை ஸர்வகலாசாலை சிறிது அவசரப்பட்டு முடிவு செய்துவிட்டதோ என்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். எனவே இதைத் தீர்ந்துபோன விஷயம் என்று எவரும் கருதலாகாது.

இதுவரை கல்வி சீர்திருத்த விஷயங்களில் இணக்கமான கவனத்தை சம்பந்தப்பட்டவர்கள் செலுத்தவேயில்லை. இது அடிப்படைக் குறை. ஸர்வகலாசாலைக் கமிஷன் சிபாரிசுகளை அமல் நடத்துவது, செகண்டரி கல்விக் கமிஷன் சிபாரிசுகளை அமல் நடத்துவது என்று பொதுப்படையாக கல்விப் பிரமுகர்களிடமிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் அவ்வப்பொழுது பேச்சு எழுகிறதே ஒழிய, அவற்றில் எவற்றையெல்லாம் எந்த அளவில் ஏற்பது, எந்த வரிசைக் கிரமத்தில் மாறுதல்களைச் செய்வது, சீர்திருத்த அமலின் ரொக்க வசதித் தேவைகள் யாவை, சர்க்கார்களிடமிருந்து கிடைக்கக் கூடிய உதவி என்ன, மாற்று வசதி உண்டா—இவை போன்ற அத்தியாவசியமான பரிசீலனைகளையும் ஆராய்ச்சிகளையும் எங்கும் செய்யவே இல்லை. ஸர்வகலாசாலைப் பிரதிநிதிகள் ஹெட்மாஸ்டர்களின் பிரதிநிதிகள், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள், சர்க்கார் பிரதிநிதிகள் போன்றோர் கூடி தீர அலசிப்பார்த்து முடிவு செய்யவேண்டிய விஷயம். ஆனால் இது இப்பொழுது ஏனோதானோவென்று, ஆங்காங்கு செல்வாக்குள்ளவர்களின் மனம் போன போக்கில் கவனிக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஸர்வகலாசாலைக் கமிஷன், செகண்டரி கல்விக் கமிஷன் சிபாரிசுகள் எந்த அளவு அமலாகியுள்ளன என்று இந்திய சர்க்கார் கேட்கிறார்

கள். இதைச் செய்தால் இவ்வளவு கிராண்டு கிடைக்கும் என்பதையும் அந்தரங்கமாக அறிவிக்கிறார்கள். கிராண்டுகள் நிறையக் கிடைக்கச் செய்யும் ஆசையில் அவசரக்கோலமாக அடிப்படையான முடிவுகளைச் செய்கிறார்கள். இம்மாதிரி நடைபெறுவது சரியல்ல. டில்லி மகாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேறியபோதிலும், மாறுதல்களை இறுதியாக்குவதற்கு முன், ஸ்தல நிலைமையையும் வசதிகளையும் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட எல்லோரும் சேர்ந்த இணக்கமான பரிசிலனை சென்னை, ஆந்திரா, திரு-கொ. மைசூர் ராஜ்யங்களில் நடைபெறச் செய்வது அவசியம்.

ஆரம்பத்தில் நாம் சுட்டிக்காட்டிய சர்ச்சையை எடுத்துக்கொள்வோம். அது காலேஜ், ஹைஸ்கூல் படிப்புகள் இரண்டையும் பற்றியது. ஸர்வகலாசாலை செய்த முடிவு காலேஜ் படிப்பை கருத்திற்கொண்டது. பட்டதாரிப் படிப்பை 4 வருஷத்திலிருந்து 3 வருஷமாகக் குறைத்துவிட்டு, ஒரு வருஷம் பூர்வாங்கப் படிப்புக்கு ஏற்பாடு செய்வது அந்த திட்டம். இதன் மூலம் இண்டர்மீடியேட் எடுபடுகிறது. இந்த பூர்வாங்கப் படிப்பை ஹைஹ ஸ்கூல்களே சொல்லித்தர வேண்டும் என்பது ஸர்வகாலசாலையின் விருப்பம். ஆனல் அதற்கு அவகாசம் ஆகுமாகையால்; இடைக்கால ஏற்பாடாக காலேஜுகளே இந்தப் பூர்வாங்கப் படிப்பை சொல்லித்தரலாமென்பது அதன் முடிவு. ஹைஸ்கூல் படிப்பை எல்லோருக்கும் இன்னொரு வருஷம் கூடுதலாக்குவது விரும்பத்தகாத ஏற்பாடு என்று டாக்டர் பாய்ட் முதலியோர் நினைக்கிறார்கள். எல்லா ஹைஸ்கூல்களும் இந்த ஏற்பாடு உள்ளவையாக அமைய வேண்டுமாயின் அதிக பணச் செலவு ஆகும். இதற்குப் பணமில்லை என்று நிதி மந்திரி கூறிவிட்டார். எனவே இதைவிட ஹைஸ்கூல் படிப்பை நீட்டாமல், காலேஜ் படிப்பு 4 வருஷமாக இருப்பதை ஐந்து வருஷமாக்குவது மேல் என்று ஒரு அபிப்பிராயம் இருந்துவருகிறது. இண்டர்மீடியேட் இருந்தும் பி. ஏ. வில் போதிய தகுதி மாணவர்களுக்கு இருப்பதில்லை. எனவே அதை எடுத்து விடுவது தகுதியைக் குறைத்துவிடும் என்ற பயம் ஆதாரமற்றது அல்ல.

செகண்டரி கல்விக் கமிஷன் சிபாரிசுகளில் காலேஜ் போகிறவர்களுக்கு மட்டும் ஒரு வருஷப் படிப்பை அதிகப்படுத்தலாம் என்று கண்டிருக்கிறது. மற்றவர்களுக்கு தொழில்களை மேல் படிவங்களில் போதிக்கக் கூடியவாறு எல்லா ஹைஸ்கூல்களும் "பல நோக்க"ப் பள்ளிகளாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதுதான் வெகு முக்கியமான சிபாரிசு. ஒரு சில பள்ளிக்கூடங்களைக் கூட அந்த மாதிரி மாற்ற முடியுமா என்று நமது ராஜ்ய நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியம் சந்தேகிக்கிறார். இந்தச் சீர்திருத்தத்தைச் செய்து வைக்க சர்க்காரிடம் பணம் இல்லை என்பதை அவர் கூறியிருக்கிறார். மேலும் பள்ளி வயதினரான 43% குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி வசதியே இன்னும் இல்லாமலிருப்பதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இம்மாதிரி எதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றி எல்லோரும் வளைய வளைய வந்துகொண்டேயிருப்பதைக் காண்கிறோம்.

செகண்டரி கல்விச் சீர்திருத்த யோசனைகளைக் கூற டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் கமிட்டியானது ஸர்வகலாசாலை

ஆரம்பக் கல்வி கமிட்டி

ஆரம்பக் கல்விப் பிரச்னையைப் பரிசீலித்து சிபாரிசுகளைச் செய்ய டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் ஒரு கமிட்டியை சென்னை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். எவ்வித மான நிர்ப்பந்தமுமின்றி பிரச்னையின் எல்லா அம்சங்களையும் அலசிப் பார்த்து முடிவு செய்யுமாறு கமிட்டியை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். புதிய அரசியல் சட்டம் அமலாகத் தொடங்கிய காலத்திலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் (அதாவது 1961-ம் ஆண்டுக்குள்) பள்ளிக்கூட வயதினரான எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாகக் கிடைக்க வேண்டுமென்பது அந்தச் சட்டத்திலேயே எழுதப்பட்டுள்ள கட்டளை. நிதி நிலைமையையும், மற்ற விஷயங்களையும் கருத்திற்கொண்டு இந்த நோக்கம் நிறைவேற்றச் செய்வதற்கு வழி வகை கூறுமாறு கமிட்டியைச் சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த கல்வி வருஷத் துவக்கத்தில் அதாவது 1955 ஜூன் மாதத்தில், புதிய ஏற்பாடு அமலுக்கு வரவேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம். அப்படியாயின் சிபாரிசுகள் மார்ச் மாத ஆரம்பத்துக்குள் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் தான் முழு பரிசீலனையை நடத்தி, அங்கீகார முத்திரையை அளித்து, புது ஏற்பாட்டிற்கு கல்வி இலாகாவும் பள்ளிக்கூட நிர்வாகிகளும் உபாத்தியாயர்களும் தயாராவதற்குச் சிறிது அவகாசம் கிடைக்கும். மூன்று மாதங்களில் யாதாஸ்தை சமர்ப்பிப்பது கமிட்டிக்குச் சாத்தியமாயிருக்கும் என்று நம்புகிறோம்.

கமிட்டியின் தலைவர் ஸ்ரீ. செட்டியார் உணர்ச்சி வசப்படாமல் நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்த்து தமக்கு நியாயமெனப்படுவதை தைரியமாக எடுத்துரைக்கும் மனப் பண்பினர். அவருக்குத் துணையாக அனுபவம் மிகுந்த உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். ஆதாரக் கல்வி நிபுணர் ஒருவர் இருக்கிறார். எல்லோரும் ஹைஸ்கூலில் உபாத்திமைத் தொழிலைப் புரிந்தவர்கள்; எனவே செகண்டரி கல்வியின் பிரச்னைகளை நன்கறிந்தவர்கள். அதற்கு இணக்கமான வகையில் ஆரம்பக் கல்வியை உருவாக்குவது விரும்பத்தக்கது. இந்த நோக்கம் கைகூட வேண்டுமாயின் டாக்டர் லட்சுமண ஸ்வாமி முதலியாரைத் தலைவராகக் கொண்ட செகண்டரி கல்விச் சீர்திருத்தக் கமிட்டி முன் கூட்டியே தன் வேலையை முடிப்பது விரும்பத் தக்கதாயிருக்கும். அது எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்று தெரியவில்லை. அப்படி முடியாவிட்டாலும், இரண்டு கமிட்டிகளும் தனித்தனியாகவும், சேர்ந்தும் பூர்வாங்க பரிசீலனைகளை நடத்திக் கொண்டு தம் வேலையில் இறங்குவதால் பயனுண்டா என்பதை ஆராய்வது நல்லது.

யின் முடிவுக்கு இசைய செகண்டரி கல்வியை உருப்படுத்துவது மட்டும் தன் கடமை என்று நினைக்காமல், ஆரம்பக் கல்வி முதல் காலேஜ் படிப்பு வரை, இணக்கமாகவும், வாழ்க்கைக்குப் பயனுள்ள வகையிலும் கல்வி போதனை நடைபெறச் செய்வது எப்படி என்பதைப் பற்றி சிந்தித்து, நல்லதோர் திட்டமொன்றைத் தயாரிக்கும் என்று நம்புகிறோம். இந்த ஆண்டின் கல்வி வாரக் கொண்டாட்டத்தில் இதைப் பற்றி நுணுக்கமான, ஆராய்ச்சியுடன் கூடிய பரிசீலனைகளும் விவாதங்களும் நடைபெற்றால், என்ன தேவை என்பதைப் பற்றிய கருத்துக்கள் தெளிவடைவது சாத்தியமாயிருக்கும். (தினமணி)

ஆரம்பக் கல்விப் பிரச்னைகளைப் பற்றி ஏற்கெனவே பரிசீலனை நடந்து, ராஜாஜி கொண்டுவந்த திட்டமும் ஒரு வருஷம் ஏறக்குறைய அமலாகியிருக்கிறது. புள்ளி விவரங்களெல்லாம் சேகரிக்கப்பட்டு தயாராயிருக்கின்றன. எனவே அழகப்பா கமிட்டி தன் வேலையை துரிதமாகச் செய்ய முடியும். பிரச்னையின் முக்கியமான அம்சங்கள் யாவை என்பதை மட்டும் பொதுமக்களுக்கு மீண்டும் இங்கு நினைவூட்டுகிறோம்.

நமது ராஜ்யத்தில் மொத்தமுள்ள ஆரம்ப பாடசாலைகள் (1 முதல் 5 வகுப்பு வரை உள்ளவை) சுமார் 38,000. அவற்றில் சுமார் 40 லக்ஷம் குழந்தைகள் படிக்கின்றன. 1,37,500 உபாத்தியாயர்கள் வேலை பார்க்கிறார்கள். படிக்கும் வயது உள்ள (அதாவது 6 வயது முதல் 12 வயதுவரை) குழந்தைகளில் 100-க்கு 48 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் பள்ளிக்கூடங்களுக்கு வருகிறார்கள். வராத குழந்தைகள் தான் அதிகம். அவர்களுடைய எண்ணிக்கை சுமார் 45 லக்ஷத்துக்குக் குறையாது. இவர்களுக்கு ஐந்தாவது வகுப்பு வரையிலாவது படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டுமாயின் இன்னும் குறைந்த பட்சம் 23,000 பாடசாலைகளுக்கு மேல் புதிதாக ஏற்பாடாக வேண்டும் உபாத்தியாயர்களும் ஒன்றேகால் லக்ஷத்துக்கு மேல் அடுத்த ஏழு ஆண்டுகளில் கிடைத்தாக வேண்டும். அடுத்த இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் இவர்களில் மிகப் பெரும்பாலோர் தேவைப்படுவர். ஆனால் போதனாமுறைப் பயிற்சிபெற்று தேறுவோரின் எண்ணிக்கை இப்பொழுது சராசரியில் வருஷம் சுமார் ஆறு அல்லது ஏழு ஆயிரத்துக்கு மேல் இராது. இதே சமயத்தில் செகண்டரி கல்விப் பகுதிக்கும் அதிகப்படி உபாத்தியாயர்கள் வேண்டியிருக்கும். ஒவ்வொரு வருஷமும் சுமார் 8 லக்ஷம் அதிகப்படி குழந்தைகள் பள்ளி வயதினராவார்கள் என்பதையும் கவனத்தில்வைக்கவேண்டும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவுஉபாத்தியாயர்களைத் தகுதியுள்ளவர்களாகப்பார்த்து தேர்ந்தெடுத்து பயிற்சி தருவதில் உள்ள பணப் பிரச்னை, அவகாச விஷயம், பயிற்சிப் பள்ளிக்கூட விஸ்தரிப்பு அம்சம், போதனாமுறை ஆசிரியர்களின் எண்ணிக்கையை வேகமாகப் பெருக்குவதன் சாத்தியக்கூறுகள் போன்ற சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளைச் சேர்த்து ஆலோசிக்க வேண்டும். புதிய பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வசதி, கரும்பலகை, பெஞ்சுகள், மேஜை, நாற்காலி, மற்ற சாதனங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் ஆகக்கூடிய செலவையும் கருத்திற்கொள்ள வேண்டியிருக்கும் ஒவ்வொன்றுமே பெரிய பிரச்னைதான். எனினும் ரொக்க வசதி கங்கு கரையின்றி இருந்தால், மொத்தத் தேவைக்கும் முழு மூச்சுடன் திட்டமிட்டு முனைந்து பார்க்கலாம்; படிக்குப் பாதியாவது பயன் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் ஆனால் நிதி நிலைமைதான் பெரிய தடங்கலா இருக்கிறது.

ஆரம்பக் கல்விக்கு நமது ராஜ்யத்தில் மொத்தம் ஆகும் செலவு சுமார் ஒன்பது கோடி ரூபாய். இதில் சர்க்கார் கையிலிருந்து செலவாவது சுமார் ரூ. ஆறுகோடி. பள்ளிக்கூடங்களை போதிய எண்ணிக்கையில் விஸ்தரித்து வசதிகளைச் செய்துதர மட்டும் ரூ. 12 கோடி செலவாகும். பிறகு குறைந்தபக்ஷம் ரூ. 6 கோடி அதிகப்படியாக ஒவ்வொரு வருஷம் ஆரம்பக் கல்விக்காக சர்க்கார் செலவழிக்கவேண்டியிருக்கும். இதைத்

தவிர போதிய அதிகப்படி உபாத்தியாயர்களைத் தயார்ப்படுத்துவதற்கு வேண்டிய பயிற்சி விஸ்தரிப்பு இருக்கிறது. இந்த அளவுக்குச் செலவு செய்ய சர்க்காரிடம் பணமில்லை. இரண்டாவதாக, எல்லா ஆரம்ப பாடசாலைகளையும் ஆதாரக் கல்வி பாடசாலைகளாக்க வேண்டும் என்ற லட்சியமும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆதாரக்கல்விப் பள்ளிக்கூடத்துக்கு ஆகும் செலவு கிட்டத்தட்ட இரண்டுமடங்காகும். இது உட்பட எல்லாப் பிரச்னைகளையும் இணக்கமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

சுமார் 45 லக்ஷம் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வராமல் இருப்பதேன் என்பதையும் கமிட்டி நுணுக்கமாக ஆராய வேண்டியிருக்கும். போதிய பள்ளிக்கூடங்கள் அருகாமையில் இல்லாதது ஒரு முக்கியமான காரணம். குழந்தைகளின் நேரம் பெற்றோருக்குத் தேவைப்படுவது இரண்டாவதுகாரணம். வறுமை மூன்றாவது முக்கிய காரணம். அநேக கிராமங்களில், முக்கியமாக ஏழை மக்களிடையே, பெற்றோர் வெளியே வேலைக்குப் போகையில் வீடுகளில் கைக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு பெரிய குழந்தைகள் வீட்டில் இருந்தாக வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக சாப்பாடுகொண்டு போகவும், சில்லறை வேலைகளில் துணை புரியவும் சிறுவர் சிறுமியர் தேவைப்படுகின்றனர். எனவே இத்தகைய அவசியம் இருக்கிறது என்பதை மதியாத எந்தச் சீர்திருத்த ஏற்பாடும் பயன் படாது. கட்டாய ஆஜர் முறையை ஏற்படுத்தினாலுங்கூட இதை அலட்சியம் செய்வதற்கில்லை.

மூன்றாவதாக கவனிக்க வேண்டிய அம்சம் ஆரம்பக் கல்வியின் நோக்கத்தைப் பற்றியது. அது செகண்டரி கல்விக்கு இசைந்ததாக இருக்கவேண்டும் என்பது உண்மையே. ஆனால் கிராமக் குழந்தைகளில் மிகப் பெரும்பாலோர் கிராமங்களிலேயே விவசாயத்தையும் மற்ற கிராமத் தொழில்களையுமே தமது பிழைப்பிற்கு நம்பியிருக்க வேண்டியவர்கள் என்பதை மறக்கலாகாது. முதல் வகுப்பில் சேருகிறவர்களில் 10-க்கு 4 பேர் கூட 5-வது வகுப்பை கிராமங்களில் பூர்த்தி செய்வதில்லை என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. பூர்த்தி செய்து மேல் படிப்புக்குப் போகிறவர்களில் பலர் விவசாயத்திலும் கிராமத் தொழில்களிலும் வெறுப்புக்கொண்டு அவற்றைவிட நகரத்தில் கடைநிலை வேலைகளில் இருப்பதே மேல் என்று நினைத்து விடுகின்றனர். இந்தப் போக்கு நீடித்தால் கிராம வாழ்வு முன்னேறுவதற்கு வேண்டிய பயிற்சியும் படிப்பும் உள்ளவர்கள் நாட்டுப் புறத்தில் இல்லாமற் போய்விடுவார்கள். எனவே விவசாயத்தையும் கிராமத் தொழில்களையும் பற்றி தவறான கருத்துக்கள் மாணவர்களுடைய மனதில் உண்டாகாதபடி, ஆரம்பக்கல்வி போதனையைத் திருத்தியமைக்க வேண்டும். கிராமச் சிறுவர்களில் பெரும்பாலோர் இப்பொழுதுள்ள வயதுவந்த தலைமுறையினரைவிட விவசாயத்தையும் கிராமத் தொழில்களையும் அதிக ஆர்வத்துடன் இன்னும் சிறப்பாக செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக்கும்படி கல்வித்திட்டம் மாற்றப்பட்டால்தான் நமது பொருளாதார நிலை மேம்பாடு அடையமுடியும். 100-க்கு 75 பேர் கிராமத்தில்தான் வாழ்கிறார்கள். விவசாயத்தையும், உப-தொழில்களையுந்தான் நம்பிப் பிழைக்கிறார்கள். எவ்வளவு வேகமாக புதிய ஆலைத்தொழில்கள் தோன்றினாலும், கிராமவசதிகளையே நம்பியிருப்போர் தாம் நமது நாட்டில் எப்பொழுதுமே மிகப் பெரும்பாலோராக இருப்பார்கள். ரஷியாவிலேயே கூட, இவ்வளவு தொழிலபிவிருத்

திக்குப்பிறகும், 100-க்கு 57 பேர் நிலத்தை நம்பி வாழவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே நம் நாட்டில் கிராமப் பொருளாதார அபிவிருத்தி தான் மிகமிக முக்கியமாக இருக்கும். அதற்கேற்றவாறு, கிராம வாழ்வில் பற்றுதலும் பிரியமும் ஏற்படக்கூடிய வகையில், ஆரம்பக்கல்வியை வகுத்து போதித்து மனதை ஆரம்பத்திலிருந்தே பக்குவப்படுத்துவது அவசியம்.

இந்த உண்மையை ஒப்புக்கொண்டால், விரைவில் எல்லோருக்கும் தக்கதோர் கல்வியை அளிப்பதற்கு இப்பொழுதுள்ள பள்ளிக்கூட, உபாத்திமை வசதிகளை அதிகபட்சம் பயன்படுத்திக் கொள்வது தான் சர்க்காரின் பண நிலைமைக்கும் நாட்டின் தேவைக்கும் ஏற்ற உபாயமாக இருக்கும் என்பது புலனாகும். இப்பொழுதுள்ள ஐந்து மணி நேரப் பள்ளிக்கூடப் படிப்பை மூன்று மணி நேரமாகக் குறைத்து மற்ற இரண்டு மணி நேரத்தை நாட்டுப்புற நல் வாழ்வுக்கான அனுபவக் கல்விக்கு ஒதுக்கி விடுவது என்ற ராஜாஜி திட்டத்தை, விவரங்களில் அவசியமெனத் தோன்றும் மாறுதல்களுடன், ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என நினைக்கிறோம். ராஜீய காரணங்களால் தான் அந்தத்திட்டம் சரிவர நடைபெறுவதற்கு வாய்ப்பு கிடைக்காமற் போய்விட்டது. எனவே அந்த அடிப்படையில் தான் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமெனத் தோன்றினால், அந்த சிபாரிசைச் செய்ய அழகப்பா கமிட்டி தயங்காது என்பது எமது நம்பிக்கை. ராஜீயம் குறுக்கிடாதபடி, நாட்டின் நிரந்தரமான நலனை முக்கியமாக மதித்து, தம் சிபாரிசுகளை அவர்கள் செய்ய வேண்டும் என்பதுவே மக்களின் ஆவல்.

ஹைஸ்கூல் படிப்பை 7 படிவங்களாக உயர்த்தும் விஷயம்

ஹைஸ்கூல் படிப்பை இப்போது போல் 6 படிவங்கள் வரை வைத்துக்கொள்வதா அல்லது செகண்டரி கல்வி கமிஷன் சிபார்சுப்படி 7 படிவங்களாக்குவதா என்பதை தீர்மானிக்கும் விஷயம் ராஜ்ய சர்க்கார்களின் யுக்தானுசாரத்துக்கு விடுவதென டில்லி மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

6-வது படிவம் வரை மொத்தம் குறைந்த பட்சம் 11 வருஷங்கள் செகண்டரி படிப்பு இருக்க வேண்டும் என்பது தான் மத்திய சர்க்காரின் நிலை.

டில்லியில் ராஜ்ய சர்க்கார்களின் கல்வி இலாகா காரியதரிசிகள் கல்வி இலாகா டைரக்டர்கள் ஆகியோரின் மகாநாடு மேற்கண்டவாறு தீர்மானித்திருப்பதாக அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட தி. கோ. கல்வி இலாகா டைரக்டர் ஸ்ரீ. சுந்தரராஜு நாயுடு 'தினமணி' நிருபருக்கு அளித்தப்பேட்டியில் கூறினார். அவர் மேலும் பின் கண்ட தகவல்களை தெரிவித்தார்.

ஒவ்வொரு ரெவின்யூ ஜில்லாவுக்கும், குறைந்த பட்சம் ஒரு பலதரப்பட்ட பள்ளி வீதம் நாடு முழுவதும் 500 பள்ளிகள் திறக்க மான்யம் வழங்குவதென மத்ய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

ஆதாரப் பள்ளிக்கூடங்கள் நிறுவுதல், கைத்தொழில் படிப்பை அபிவிருத்தி செய்தல் போன்ற விஷயங்கள் முக்கியமாக பரிசீலனை செய்யப்பட்டன.

உபநிஷதச் சிறு கதைகள்

"ஆசி"

(ப்ருஹதாரண்யக உபநிஷதம்)

எழுவகை உணவும் ஆன்ம உணர்வும்

எல்லோருக்கும் தந்தையாகிய ப்ரஜாபதி தனது அறிவாலும் தவத்தாலும் எழுவகை உணவைப்படைத்து உலகைக் காக்கின்றார்.

உலகில் எல்லோரும் சாதாரணமாக உண்ணும் உணவு ஒரு வகையாகும். இறைவனால் படைக்கப் பெற்ற உணவை வேள்விப் பொருளாகக் கருதாமல் தனக்கென்று சமைத்து உண்போர் பாபத்தையே வளர்க்கின்றனர். உணவுப்பொருள் உண்டாவதற்குக் காரணமாகவுள்ள சக்திகட்கும் (தேவர்கட்கும்) மற்றோர்க்கும் முறைப்படி பகிர்ந்து கொடுத்த பின்னரே புசிக்கவேண்டும். இவ்வாறு செய்தல் இறைவனை உணர்வதற்கு உரிய உள்ளத்தைத்தருகின்றது. உணவுப்பொருள்களும் பெருமிதமாகக்கிட்டும். [இதனையே கீதையில், "தேவர்கட்குக் கொடுக்காமல் அருந்துவோன் ஒரு திருடன்" என்றும் "தனக்கென்று சமைத்து உண்போன் பாபத்தையே உண்போன் ஆவன்" என்றும் கண்ணன் கூறியிருக்கின்றார்.]

தேவர்கட்கு உரிய உணவாக இருவகை ஏற்பட்டது. ஒன்று அக்னியில் ஆஹுதி செய்யப்படுவது; மற்றது பலியாகப் போடப்படுவது. இரு உவாக்களில் செய்யப்படும் வேள்விகளையே இவ்விருவகை உணவு குறிக்குமென்பர் சிலர். இவ்விருவகை உணவு தேவர்கட்கு உரியனவாகலின், அவர்கட்கென்றே வேள்வி செய்யப்படவேண்டும். பயனைக்கோரி விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செய்யப்படும் வேள்விகளை இது குறிக்காது. அவற்றில் ஈடுபடக்கூடாது. அப்பொழுதே தூய மனோநிலை ஏற்பட்டு ஆன்ம உணர்வு விரைவில் அடையப்பெறும்.

ஓர் உணவு வகை பசுக்களிடம் கொடுத்தார். அதுவே 'பால்' எனப்படுவது. பிறந்தவுடன் கன்றுகளும் குழந்தைகளும் பாலைக்குடித்தே பிழைக்கின்றன. பின்பே புல்லையோ மற்ற உணவுப் பொருள்களையோ உண்ணத் தொடங்குகின்றன. உணவுப் பொருள்களின் ஸாரமாகத் திகழ்வது பால். பாலைமட்டுமே அருந்தி வாழ இயலும். இதனை வேள்விப் பொருளாக அகப்பொருள் அறிந்து ஆஹுதி செய்தலால் நீடூழி வாழலாம். மீண்டும் பிறவி ஏற்படாதென்ற அமுதநிலை அடையப்பெறும்.

இவ்வுணவு வகை நாடோறும் அருந்திவரப்படினும் குறைவுபடாதிருப்பதைக் காண்கின்றோம். ஏனெனில் இதன் காரணமாகிய புருஷன் குறைவற்றவன். தனது அறிவாலும் தொழிலாலும் மீண்டும் உண்டாகும் வகையை ஏற்படுத்துகின்றான். ஒரு கணம் சும்மா இருந்தால் உணவு தீர்ந்து விடும். எனவே இவ்வுலகு வினையும் அதன் பயனுங் கொண்டது என்பதாகும். இவ்வாறு குறைவில்லாத புருஷனை அறிந்து உபாஸிப்பதால் அமுதநிலை அடையப்பெறும்.

எஞ்சிய மூவகை உணவைத் தனக்கென்று வைத்துக்கொண்டார். தன்னை எல்லோரும் அறியவேண்டி, ஆ த் ம ா வ ா க ஆக்கிக்கொண்டார். அவை மனம், வாக்கு, ப்ராணன் என்பன. மனம் இந்திரியங்களுடன் இணைப் புறுதபோது பொருள்கள் புலனாவதில்லை. "மனம் வேறு இடத்தில் இருந்த தால் பார்க்கவில்லை" என்றும் "கூறியது செவியிற் படவில்லை" என்றும் மாந்தர் கூறுவதைக் காண்கின்றோம். காமம் (இச்சை), கருதுதல், ஐயம், நம்பிக்கை, நம்பிக்கையின்மை, உறுதி, உறுதியின்மை, நாணம், அறிவு, அச் சம் முதலிய பண்புகள் மனத்தினைச்சார்ந்து நி ற் ப ன. நம்மையறியாமல் ஒருவன் முதுகைத் தொட்டாலும், மனம் உடனே அதனை உணர்ந்து அறி விக்கின்றது. ஆகவே மனமெனும் அகக்கருவி நாம் காணாவிடினும் உளதென் பது ஊஹிக்கத்தக்கது.

ஒலியே வாக்கு எனப்படுவதாகும், பொருள்களை நன்கு விளங்கச்செய் கின்றது. ஒலி பொருள்படாத ஓசையாகவும், பொருள்படும் சொல்லாகவும், பொருளைக்கொண்ட இசையாகவும், மற்று இடி முழக்கம் போன்றதாகவும் பலவகையாக இலங்கும். இது மற்ற பொருள்களைப்போன்று விளக்கமுறாது.

ப்ராணன் அல்லது உயிர் வன்மை ஐவகையாகத் தொழில் புரிகின்றது. ஹ்ருதய கோசங்களை அசைவுறச்செய்து மூச்சாகவும் முன் நிற்றலின் இது ப்ராணன் எனப்படுகிறது. ஹிருதயத்திற்கு மேலுள்ள பகுதியில் நிலை கொண்டது. ஹ்ருதயத்திற்குக் கீழே உந்திவரை நிலைகொண்டு மலங்களை வெளிப்படுத்த உதவுவதாக உ ள து அபானன் எனப்படுகிறது. இ வை இரண்டிற்கும் இடையே நிலைகொண்டு வ ன் மை யு ட ன் விளங்குவது வ்யானன் எனப்படுகிறது. உண்ட உணவை உடலுக்கு ஏற்றதாக மாற்றி ஜீரணம் செய்து சீர்படுத்துவது ஸமானன் எனப்படுகிறது. உடலெங்கும் பரவி நின்று எழுவதற்கும் அசைவதற்கும் உதவுவதாக உளது உதானன் எனப்படுகிறது. அனன் எனப்படுவது உடலின் செயல்கள் எல்லாவற்றிற்கும் உதவுவதாகவுள்ள பொதுவான வன்மையாகும். [ப்ர, அப, வி, ஸம, உத் என்ற உபஸர்க்கங்கள் இணைக்கப்பெற்று நிலைகளுக்கேற்ற பெயர்களாக உயிர் வன்மைகள் ஐவகையாகக் கூறப்படுகின்றன. முன்நிற்கும் ப்ராணனைக் கொண்டு எல்லாம் அறியப்படுகின்றன.]

வாக்கு, மனம், ப்ராணன் என்ற மூன்றுங்கொண்டதே ஆ ன் ம ா எனப்படும். இவற்றின் மூலமாகவே ஆன்மா உணரப்படும். ஆகவே எல்லாம் இம்மூன்றால் ஆனதே. பூவுலகு, இடையுலகு, வானுலகு என்ற மூவுலகும் முறையே வாக்கு, மனம், ப்ராணன் என்பனவற்றின் நிலைகளே. ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மும்மறைகளும் அவ்வாறே. தேவர், தென்புலத்தார், (பித்ருக்கள்), மனிதர் என்ற படைப்பினரும் அவ்வாறே. தந்தை, தாய், மகன் என்ற பகுப்பும் அவ்வாறே, வாக்கு நன்கு அறியப்படுவனவற்றைக் குறிக்கின்றது. மனம் நன்கு அறியப்பட வேண்டுவனவற்றைக் குறிக்கின் றது. அதாவது, முன்பின் ஆய்வு செய்து அறிவிக்கும் ஆற்றல் கொண்டது. ப்ராணன் அறியப்படாததைக் குறிக்கும். அதன் இருப்பே அறியப்படாத நிலையில் உளது. வாக்கு எனும் உணவிற்கு ஆதாரமாக விளங்குவது ப்ருத்வி; அதன் ஒளிவடிவு அக்னி. வாக்கின் அளவிற்கேற்ப ப்ருதிவியும் அக்னியும் பரவி நிற்கின்றன. மனமெனும் உணவின் ஆதாரம் வானுலகு. அதன்

ஒளி ஆதித்யனுகும். வாக்கு, மனம் இவ்விரண்டின் சேர்க்கையால் ப்ராணன் உண்டாயிற்று. அதுவே ஈசுவரன். அதுவே ஜீவன். ப்ராணனெனும் உணவிற்கு ஆதாரம் ஜலமாகும். அதன் ஒளி சந்திரன். இம்மூவகை உணவும் சமமான பண்புகளைக் கொண்டன; முடிவற்றன; குறைவற்றன. இவ்வாறு அறிந்து உபாஸனை செய்வதால் முடிவற்ற, குறைவற்ற, அமுதநிலை அடையப்பெறும்.

இந்த மூவகை உணவையுடைய ப்ரஜாபதி பதினாறு கலைகளையுடையவர். காலஸ்வரூபி. தேய்வதும் வளர்வதுமாகவுள்ள பதினைந்து திதிகளெனும் பிறைகளைப்போன்று பிராணிகளிடத்தில் குறைந்தும் வளர்ந்தும் விளங்குகின்றார். பதினாறுவது கலை நித்தமும் உளது. உணவுவடிவில் ப்ராணிகளிடத்தில் அமையன்றிரவு பிரவேசின்கின்றார். பதினைந்து கலைகளால் ஏற்றக் குறைகளை உடையவராகத் தோற்றுவிக்கின்றார்.

பதினாறு கலைகளுடன் விளங்குகின்றவராகக் கூறப்படும் பரமாத்மா நமக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறார் என்று கருத வேண்டுவதில்லை. உடலில் ஆன்மாவாக இலங்குகின்றாரன்றோ! தான், பதினாறுவது கலையாகவும், பதினைந்து கலைகளைச் செல்வமாகக்கொண்டு ஜீவாத்மாவாகவும் விளங்குகின்றார். செல்வமிழந்தாலும், உயிர் இருந்தால், உடமை இழந்தநிலையில் இருப்பதாகக் கூறப்படுவரே யன்றி இல்லையென்று கூறப்படார். மீண்டும் செல்வத்தைப் பெறலாம். சக்கரத்தின் குடமிருந்தால், ஆரக்கால்களை அமைத்து சக்கரமாக்கலாம். ஆகவே, இவ்வுடல் சக்கரத்தின் குடத்திற்கு ஒப்பிடலாம். இளைத்திருந்தாலும் உணவு கொண்டு பருத்த நிலையடையலாம். ஆகவே, இறைவனை இந்நிலையில் காணவிடினும், உள்ளத்தே இருப்புக்கொண்டிருப்பதால், கலைகளைவளர்த்துக் கடவுளைக்காணலாம்.

மனுஷ்யலோகம், பித்ருலோகம், தேவலோகமென்று மூன்று உலகங்கள் உள. மகவால் அடையப்படுவது மனுஷ்யலோகம். வினைகளால் (வேள்விகளால்) அடையப்படுவது பித்ருலோகம். உபாஸனையால், வித்யையால், அடையப்படுவது தேவலோகம். தேவலோகம் சிறந்த உலகம் -அமுத உலகம். ஆகவே அதனை அடைய உதவும் வித்யையைப் பெரிதெனப் போற்றுகின்றனர். மனுஷ்ய லோகத்தில் புத்திரனைப்பெரிதும் பாராட்டுகின்றனர். உடமைகளை ஒப்படைக்கின்றனர்; அவற்றிற்கு உரியவனாகக் கருதுகின்றனர். ஏனெனில் இவன் தந்தையின் வாக்கு, மனம், ப்ராணன் என்ற மூன்றின் வடிவாகத் தோன்றியவன். தந்தை நிறைவேற்ற இருப்பதை பூர்த்தி செய்யத் தகுந்தவன். ஆகவே புத்திரன் என்ற பெயரால் வழங்கப்படுகின்றான். புத்திரனால் இவ்வுலகில் பிதா புகழ் நிலையைப் பெறுகின்றான். வாக்காலும் மனத்தாலும் ப்ராணனாலும் சிறப்புறுகின்றான். இவ்வாறு உணர்ந்து, வாக்கு, மனம் ப்ராணன் என்ற மூவகை உணவுகொண்ட ஆன்மாவை அறிந்து அழியா ஆன்ம நிலையைப் பெறவேண்டும்.

வாக்-மன-ப்ராண-உபாஸனை

ப்ரஜாபதி வாக்கு முதலிய கரணங்களைப் படைத்து வினைபுரியச் செய்தார். அவை ஒவ்வொன்றும் தாமே பெரிதென ஒருவருக்கொருவர் கூறிக் குலாவிக் கொண்டிருந்தன. களைப்பு வடிவில் ம்ருத்யு தோன்றினார். இந்

திரியங்களின் வினைகளுக்கு இடமாக நின்றார். ஆனால் ப்ராணனைக் களைப்பு அடைய இயலவில்லை. இதனைக்கண்டு, கரணங்களெல்லாம் ப்ராணனை அறிய முயன்றன. முக்கியப்ராணன் நமக்குள் சிறந்து விளங்குகின்றது. சஞ்சரித்தும் சஞ்சரிக்காமலும், குறைவின்றியும் நாசமின்றியும் விளங்கு கின்றது. நாம் அதன் ஆன்மாவாக இருக்கின்றோம் என்று எண்ணிக் கொண்டு அந்தப்ராண ரூபமாகிவிட்டன. ஆகவே வாக்கு முதலியனவும் ப்ராணன் என்ற சொல்லால் வழங்கப்படுகின்றன. இது ஆத்மாவைக் குறித்துக் கூறப்பட்டது.

தேவர்களை எடுத்துக் கொண்டால், அவர்களும், 'நான் பிரகாசிக்கச் செய்கின்றேன்' என்று அக்னியும், 'தவிக்கச் செய்கின்றேன்' என்று ஆதித்யனும், 'தண் கதிர்களுடன் இன்புற விளங்குகின்றேன்' என்று சந்திரனும், இவ்வாறே மற்ற தேவதைகளும் சொல்லிக் கொண்டனர். வாக்கு முதலிய கரணங்கள் ப்ராணனைச் சிறந்ததாக அறிந்தது போன்று தேவர்களும் தமக்குள் வாயுவே முக்ய தேவதையென்று அறிந்தனர். ஆகவே இந்த வாயுஉபாஸனை ப்ராணஉபாஸனை. அதாவது, ப்ராணாயாம யோகம் செய்வதால் ரோகம் நீங்கி, நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று ஆன்ம உணர்வெனும் குறிக்கோள் கைகூடப்பெறும். இவ்வாறு தேவதையைப்பற்றிக் கூறப்பட்டது.

இனி உலகை எடுத்துக் கொண்டால், அது பெயர், வடிவம் வினை என்ற மூன்று அனாத்மவஸ்துக்கலால் ஆனது. பெயர்களுக்கு மூலகாரணம் வாக்காகும். எல்லாப் பெயர்களும் வாக்கினின்றே எழுகின்றன. இந்த வாக்கு எல்லாப் பெயர்களுக்கும் பொது. எல்லாப் பெயர்களுடனும் இது ஸமமாக இருக்கின்றது. வாக்கு எல்லாப் பெயர்களையும் தாங்குவதால் இது பிரம்மம், ஆன்மநிலை. வடிவங்களுக்கு மூலகாரணம் கண்ணாகும், எல்லா வடிவங்களுடனும் இது ஸமமாக இருக்கின்றது, ஆகவே இது வடிவங்களின் ஆன்மாவாகும்.

வினைகளுக்கு (கர்மாக்களுக்கு) ஆதாரமாக விளங்குவது சரீரமே. சரீரத்தினின்றே எல்லா வினைகளும் உண்டாகின்றன. சரீரம் எல்லா வினைகளுக்கும் பொதுவாக உளது. ஆகவே வினைகளின் ஆன்மாவாக விளங்குகிறது. பெயர், வடிவு, வினை என்ற மூன்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பெற்று ஒன்றாகவே, சரீரமாகவே இலங்குகின்றன, ஒன்றாயினும் சரீரம் இம்மூன்றிலும் உளது. இது அமுதமாகும். இந்த அமுதம் ஸத்யத்தால் (ஸ்தூல தேகத்தால்) மறைக்கப்பட்டுள்ளது. ஸூக்ஷ்ம தேகமே, ப்ராணனே, அமுதமாகும். ஸத்யமெனும் ஸ்தூலதேகம் நாம ரூபங்களால் (பெயர் வடிவங்களால்) ஆனது. இவ்விரண்டுள் பிராணன் மறைக்கப் பெற்றுள்ளது. இதனை அறிந்து உபாஸனை செய்து அமுதநிலை பெற வேண்டும். அதாவது, புறத்தே காணப்படும் உலகு அனாத்ம வஸ்துக் களாலானது என்று அறியப்படுதலின், அகநோக்கு கொண்டு ஆன்மாவை அறிய வேண்டுமென்பதாம்.

ஆதாரக்கல்வியும் பூதானயக்ஞமும்

ஒரு ஸ்திரீயின் பரிதாப நிலை

நாங்கள் ஒரு கிராமத்தில் ஒரு விவசாயியின் வீட்டில் உட்கார்ந்திருந்தோம். அங்கு தானம் பெற்ற பூமியை பங்கீடு செய்துகொண்டிருந்தோம். அப்பொழுது கடுமையாக மழை பெய்துகொண்டிருந்தது. கிராமத்தில் எங்குபார்த்தாலும் சேரும், சகதியுமாக இருந்தது. பாதையில் மாட்டுச்சாணம் இங்கும் அங்கும் அதிகமாக இருந்ததால் பார்ப்பதற்கே ஒரே அருவருப்பாயிருந்தது.

அவ்வமயம் ஒரு துர்பலமான ஸ்திரீ இடுப்பில் குழந்தையை வைத்துக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் அச்சக்தியில் நடந்து வந்தாள். அவள் ஏற்கனவே துர்பலமானவள். அதிலும் இடுப்பில் குழந்தை. கொஞ்சம் தவறிவிட்டால் அவளுக்கும் அக்குழந்தைக்கும் என்னகதி ஏற்படும்? அதே சமயம் பாதையில் மூன்றுவயது பாலகன் மிகவும் சிரமப்பட்டுத் தள்ளாடிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். இவைகளைக் கண்டு என் மனதில் சுக துக்கம், நம்பிக்கை, அவநம்பிக்கை ஆகிய காட்சிகள் மாறி மாறி வந்தன.

இக்கஷ்டம் எப்பொழுதுதான் தீரும்? இச்சிறிய குழந்தை எப்போது தான் பயமின்றி மழைபெய்தாலும் ஓடி ஆடி போக முடியும்? இப்பெண்மணியின் தேகாரோக்கியம் எப்பொழுதுதான் சீர் திருந்தும்? கடும் மழையிலும் அப்பெண்மணி கையில் குடையுடன் கஷ்டமின்றி எப்பொழுதுதான் இப்பாதையில் அனுயாசமாக செல்லமுடியும்? இதை எல்லாம் நினைத்து மனம் நிராசை அடைந்து விட்டது.

உரமும், சுகாதாரமும்.

அடிப்படை ஆசிரியர் என்றமுறையில் கீழ்க்காணும் எண்ணங்களே தோன்றியது. மாட்டுச்சாணம் சரியான முறையில் ஒரு இடத்தில் கம்போஸ்ட் உரம் தயாரிக்கலாம். வீட்டிலுள்ள மாட்டுத் தொழுவங்கள் விஞ்ஞான ரீதியில் சுத்தமாக வைத்திருந்தால் கொசு ஏற்படாது. வீதியில் இருக்கும் சாணங்களை உடனே எருக்குழியில் கொட்டி கம்போஸ்ட் உரம் தயாரித்தால் தெரு அசுத்தமாக இருக்காது. ஒவ்வொரு வீட்டிலும் தங்கள் தங்கள் நிலத்தில் கக்கூஸ் ஏற்படுத்துவது கஷ்டமில்லை. கூடவே சேவாகிராமத்திலுள்ளதைப் போல பொதுக்கக்கூஸும் அமைக்கலாம். கிராமவாசிகள் நகரவாசிகளைப் போல் பிறரை எதிர்பார்க்கத் தேவையில்லை. மலம், மூத்திரம், சாணம் இவைகளைத் தனியாக ஓர் இடத்தில் சேகரித்து வைத்துக் கொண்டால் நல்ல எருவும் கிடைக்கும். அதனால் விவசாயமும் பெருகும்.

குடிதண்ணீரும், பாசனமும்.

இதன் பின்னர் பாக்கி உள்ளது குடி தண்ணீரும் பாசன வசதியும் தான். கிராமங்களிலுள்ள கிணறுகளை புதுப்பித்தால் குடி தண்ணீர் கிடைக்கும். தகுந்த சமயத்தில் கிணற்றில் மருந்து போட்டுத் தண்ணீரை சுத்தப்படுத்திக் கொள்ளலாம். ஆகையால் குடி தண்ணீருக்குக் கஷ்டமே இராது. பாஸனத்திற்கு கிணறும் வாய்க்காலும் வேண்டும். இதற்குக் கொஞ்சம் தான் பணம் செலவாகும். அரசாங்கம் கிணறு வெட்டப் பணம் உதவி செய்கிறது. அநேக இடங்களில் கிராம நல இலாகா வேலை செய்கிறது. அவர்களும் உதவி புரிவார்கள். கிராமக் குடிசைத் தொழில்கள் மலர்ச்சியடைந்தால் கிராமம் செழிப்படையும்.

வீட்டுத் தொழில்

குடிசைத்தொழிலுடன் ஒவ்வொரு கிராமத்திலும் கதர்வேலையும் நடைபெறவேண்டும். இங்குதான் ஆதாரக் கல்வி உதவிபுரிகிறது. ஆதாரக்கல்வி சுயதேவை பூர்த்தி இவை இரண்டு மகத்துவத்தை மக்கள் புரிந்துகொண்டால் கதர் தத்துவத்தை மக்கள் அறிந்துகொள்வார்கள். இவ்விதமே கிராமச்செக்கு, தோல் பதனிடுதல் முதலியவற்றை ஆரம்பிக்கலாம்.

ஆதாரக்கல்வியே, ஆதாரவேலை.

ஆதாரக்கல்வியை பூர்ணமாக தேசம்பூராவிலும் பரப்பாதவரை இவை சாத்யமில்லை. காந்திஜியின் 15 நிர்மாணதிட்டங்கள் 30 வருஷங்களாக நடைபெறுகிறது. ஆனால் சமுதாயம் அவைகளைப் பூர்ணமாக உணரவில்லை. இதன் காரணத்தை காந்திஜீ 15 வருஷங்களுக்கு முன்னமேயே அறிந்துகொண்டார். நிர்மாண திட்டங்கள் தனித்தனியாக நடைபெற்றால் வளர்ச்சியடையாது என்பதை காந்திஜீதான் ஆதாரக் கல்விதிட்டத்தை ஆராய்ச்சி செய்யும் பொழுது கண்டுகொண்டார். ஆதலால் ஆதாரக்கல்வியை 18-வது நிர்மாணதிட்டமாக எடுத்துக்கொண்டார். பின்னர் காந்திஜீ கூறினார் "என் வாழ்க்கையில் முக்ய வேலையாகக் கொள்வது இவ்வாதாரக்கல்வியே யாகும். இதில் எல்லா நிர்மாண திட்டங்களும் அடங்கியிருக்கிறது." அதன்பின் இவ்வாதாரக்கல்வி ஒரு கல்வி முறை என்று மட்டுமிராமல் வாழ்க்கை வழியாகவே அமைந்து விட்டது. இது காந்திஜீயின் சர்வோதய தத்துவத்திற்கு ஒரு உருவாக அமைந்து விட்டது. ஆதாரக் கல்வி ஆரம்பமாகி சில வருஷங்கள் ஆகிவிட்டன. இக்கல்வி முறையை இந்தியாவில் மட்டுமல்ல, பல வெளி நாட்டு அறிஞர்களும் ஆதரித்திருக்கிறார்கள்.

ஆதாரக்கல்வியும், சமுதாயமும்.

இவ்விதமிருந்தும் சமுதாயத்தை புதிய உருவத்தில் இன்னும் மாற்ற முடியவில்லை. ஆதாரக்கல்வி நடைபெறும் இடங்களிலும் பொது சமுதாயத்தை மாற்ற விரும்பியது வெற்றியடையவில்லை. இதன் காரணங்கள் யாவை?

இதற்குப் பதில் ஒரு உதாரணப் பூர்வமாகக் கொடுக்கிறேன். ஒரு வீடுகட்ட விரும்புகிறோம். அதற்கு பிளான் போட்டு நிலம் வாங்கி சாமான்கள் சேகரித்து தயாராக இருக்கிறோம். ஆனால் மழைகாலம் வந்து விட்டது. வேலை துடங்க முடியவில்லை. வெகு அவசரமாக செய்ய முற்பட்டாலும் மழைக்காலத்தில் ஒன்றும் செய்ய முடியாது. அதேபோல் அதிக கோடைகாலத்திலும் வேலை வேகமாக நடைபெறாது. இதேமாதிரி தான் நம் நிர்மாண காரியங்களின் நிலைமையும் இருக்கின்றன. இத்திட்டங்களைப் பெரிய அளவில் நடத்த தகுந்த சூழ்நிலை வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் கூறவிரும்புகிறேன். கிராமங்களில் எல்லாக் குழந்தைகளும் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ள பாடசாலைக்கு வரவேண்டும். ஆதாரக்கல்விசாலை இருந்தும் பலர் வருவதில்லை. ஆசிரியர்கள் தாய் தந்தைகளை சந்தித்து மிகவும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் தாய் தந்தைகள் குழந்தைகளை அனுப்ப மறுக்கிறார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் போய்விட்டால் வீட்டுவேலையை யார் பார்ப்பார்கள்? தகப்பனுருக்கு யார் உணவு எடுத்துக்கொண்டு செல்வார்? மாடுகளை மேய்ப்பது யார்? என்ற கேள்விகள் எழுகின்றன.

இப்பொழுது யாரைக் குறை கூறுவது? தாய் தந்தைகளைக்

குறை கூறினுல் கிராமச் சூழ்நிலையை அறியாதவர்களாவோம். ஆசிரியர்கள், பாவம்! என்ன செய்வார்கள்! வற்புறுத்தி பையன்களை அழைத்து வந்தால் அக்கிராமவாசிகளின் வீட்டு நிலைமை சீர் கெட்டு விடும்.

ஆகையால் ஆதாரக்கல்வியுடன் இச்சிக்கல்களை நிவர்த்தி செய்யக் கூடிய வேறொறு, நிர்மாணத் திட்டத்தையும் சேர்த்து வேலை செய்தால் ஒருகால் பரிகாரம் காணலாம்.

சுதந்திரம் கிடைத்த பிறகு நிர்மாண திட்டங்களுக்கு தகுந்த சூழ்நிலை ஏற்படும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். சுதந்திரம் கிடைக்கும் வரை நிர்மாண திட்டங்களை ஓர் ஆராய்ச்சியாக நடத்தி வருவோம். அதன் பின்னர் அதை தேசப் புதிய அமைப்புக்கு அஸ்திவாரமாக்கலாம் என்று பலரும் கனவு கண்டனர்.

சுதந்திரத்திற்கு பின் நிர்மாண வேலை

சுதந்திரம் வந்து விட்டது. ஆனுல் அச்சூழ்நிலைதான் ஏற்படவில்லை. சுதந்திர அரசாங்கத்தில் ஒவ்வொரு பிரஜையும் தனக்கு பூர்ண பொருப்பு உண்டு என்பதை உணரவில்லை. அதற்குப் பதிலாக எங்கும் சுய நலந்தான் தலைவிரித்தாடுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் ஆதாரக் கல்வியோ மற்ற நிர்மாணத்திட்டங்களோ எவ்விதம் வளர்ச்சியடைய முடியும்? ஏதோ காந்திஜீயின் தவ மஹிமையால், விநோபாஜீயைப் போன்ற மகான்களால் நிர்மாணத் திட்டம் என்ற விளக்கு மின்னி எறிந்துகொண்டிருக்கிறது. சுயநலம் என்ற கடும் இருளில் இப்பிரகாசம் அதிகம் பரவமுடியவில்லை.

காந்திஜி ஒரு தடவை கூறினுர், "ஆதாரக்கல்வி உண்மையான கல்வி முறை என்ருல் சமுதாயத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு பதில் சொல்லக்கூடிய சக்தி இருக்கவேண்டும்." தேசத்தில் கடும் பஞ்சம் தாண்டவ மாடிக் கொண்டிருக்கும் போது காந்திஜி இவ்விதம் கூறினுர். ஆனுல் இன்றைய சூழ்நிலை அவ்வளவு இருள் படிந்ததாக காணப்படவில்லை.

பூமி தான யக்ஞம்

இக்கஷ்டங்களையும், இடையூருகளையும், தீர்க்க ஒரு இயக்கம் நடத்த வேண்டுமேயானுல் அது பூமிதான யக்ஞத்தின் மூலம் தான் நடைபெற வேண்டும். ஆதாரக்கல்விக்குத் தகுந்த சூழ்நிலை பூதான யக்ஞத்தின் மூலம் தான் ஏற்படுத்தமுடியும்.

நாம் அரசியல் மூலம் இச்சூழ்நிலை ஏற்படுத்த முடியும் என்று எண்ணியிருந்தோம். ஆனுல் அது இயலாதது என்பது நிரூபணமாகிவிட்டது. பூமிதான யக்ஞம் அரசியல் சம்பந்த மற்றது. இது லோகநீதியை அஸ்திவாரமாகக் கொண்டது என்று விநோபாஜி கூறுகிருர். அதன் மூலம் தான் நாம் விரும்பும் சூழ்நிலை ஏற்படுத்த முடியும்.

ஆகையால் ஆதாரக்கல்வி ஊழியர்கள் இவ்வியக்கத்தில் பூரணமாக ஈடுபட வேண்டும். பூதான வெற்றியின் மூலம் நாம் விரும்பும் ராம ராஜ்யம் அதாவது கிராம ராஜ்யத்தை ஏற்படுத்த முடியும்.
(மூலம் : ஸர்வோதயம்.)

ஏர் முனையிலே

திரு. இராம சொக்கலிங்கம் IV. U. C.

பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

விஞ்ஞானத்தேர் பவனிவரும் இந்நாளில் விந்தை பல புரியும் கலப்பையின் பெருமையையும் இன்றியமையாமையையும் பேசுவோரில்லை. எழுதுவோரில்லை. காரணம் மக்களல்ல. மக்களை இழுத்துச் செல்லும் காலதேவனின் திருவிளையாடல்.

அந்தக் கலப்பையின் பெருமையை மேலது கீழும் கீழது மேலுமாக மண்ணை புரட்டிச் சமுதாய வாழ்விற்கு உயிரளிக்கும் கொழு முனையை நாம் அடியோடு மறப்பதற்கில்லை. விஞ்ஞானத் தேர் விரைந்து வரினும் உ முதற்றொழிலில் அது தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்துவதற்கு இந்நாட்டுப் பொருளாதாரம் இடமளிக்காது என்பது திண்ணம். ஆதலால் நாம் உழவின் உயர்வை, இன்றியமையாமையை உணர்ந்து அதன் வழி நடக்க ஆவன செய்தல் வேண்டுமன்றோ?

இலக்கியம் இத்துறையில் நமக்கு நல்கும் இன்னுரைகளை உழவுத் தொழிலில் ஊக்கம் குறைந்த இந்நாளில் நினைவூட்டுவது "பழங்கதை பேசும் பண்பா"காது.

தமிழரின் தனிப்பெரும் ஏடு கலப்பை புரியும் முன்னேற்றப் பணிகளைத் தெற்றெனப் படம் பிடித்துக் காண்பிக்கின்றது.

ஐயோ உழவுத் தொழிலா? சேற்றில் இறங்கவேண்டாமே! வெய்யிலெனப் பாராது, மழை யென முனியாது வரப்பிற்கும் அண்மையிலே புரிய வேண்டிய கடும் பணியாயிற்றே அது! என்று உழவுத் தொழிலைக் கண்டு அஞ்சியோடினன் உட்கார்ந்தே உண்ணுகின்ற உன்மத்தன் ஒருவன். ஓடினன் எங்கு? நாகரிக உடையணிந்து காசுக்காக வேலைபுரிந்து இல்லம் நோக்கி மீளாமென்று உல்லாசப் புரியை நோக்கி ஓடினன்!

ஒரு மாதம் உருண்டோடியது. அவனது இலேசான உழைப்புக்குச் சில வெள்ளி நாணயங்கள் அவன் கரங்களில் உருட்டப் பட்டன. வந்த வழியே திரும்பினன். வரப்படியிலே பணிபுரியும் கந்தனிடம் அரிசி வாங்குவதற்கு. கந்தன் ஒரு புன்முறுவலோடு அவனிடம் அரிசியைக் கொடுத்தான். அந்தப் புன்முறுவலுக்குத் தான் என்ன பொருளோ யார் கண்டார்கள்? ஆனல் பின் வரும் பொய்யாமொழியாரின் பொதுக் குறளிலிருந்து நாம் ஒருவாறு அதன் பொருளை உணர முடிகின்றது.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனல்
உழந்தும் உழவே தலை"

இற்றை நாளிலே வயலிலே கலப்பை பிடிப்பவன் ஒரு சாதாரண மனிதனுக மதிக்கப் படுகின்ருன் பொதுமக்களால்.

உழைத்து உழைத்து உருக் குலைந்த உருவம் என்று அவனைச் சார்ந்த அரசியல் கட்சிகள் வர்ணிக்கின்றன.

ஆனல் உலககவி வள்ளுவன் கருத்திலே அவனே வாழ்வாங்கு வாழ்பவனுகவும், ஏனையோர் அவனைப் பின்தொடர்ந்து தொழுது வாழ்பவராகவும் கருதப் படுகின்றனர். "எனவே இன்று சுயநலத்துடன் மட்டுமின்றி பொதுநலத்துடனும் வாழ்பவன் உழவன்" என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்
வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

இன்று உழவன் கந்தையை உடுத்தித் திரியலாம். வாழவகையின்றி இருக்கலாம். ஆனல் இவை அரசியல் வாதிக்குரிய வாக்கு வாதங்கள். ஆனல் நமக்கு வேண்டியவை?

உழவன் இன்றி உலகு இல்லை. உழவன் கரங்கள் கலப்பையைப் பிடியாதொழின் உலகம் மாண்டொழியும். ஆதலால் அவன் மேற்கொண்ட பணியின் இன்றியமையாமையை நோக்கி நம்மால் இயன்றவரை உழவனின் பெருமையை உலகறியச்செய்து அவன் வாழ்வை வளமாக்குவது தானேயன்றி அவனது வரண்ட வாழ்வைக்காட்டி நம் வாழ்வை வளம் படுத்தும் அரசியல் நோக்கமல்ல.

நாட்டிற்கு வேண்டியது நல்ல வேளாண்மை, கொழுமுனை தந்த செல்வமாகிய பொன்னிற நெற்குவியல் பெருகிய நாடு ஒரு பெரிய வல்லரசாகத் திகழுமென்பது திண்ணம். ஏனைய நாடுகள் யாவும் அவ்வல்லரசின் குடைக்கீழ் தானேவந்து தங்கும், இவ்வெல்லாவித முன்னேற்றத்திற்கும் காரணம் யார்? எது? என வினவின் அலகுடைநீழலவனும் அவன் கலப்பையும் என விளக்கி உரைக்கலாம். இதோ, கீழே, இக்கருத்துக்களை நல்கும் குறுகத்தரித்த குறள்.

"பலகுடை நிழலும் தங்குடைக்
கீழ்க்காண்பார்
அலகுடை நீழலவர்"

எனவே உலகமக்கள், நாஞ்சிலல்லது படையறியா வண்ணமும், உழவனல்லது இன்றியமையாதான் இல்லை என்னும் எண்ணமும் கொண்டு உழவனது முன்னேற்றத்திற்கு உழைக்குங் காலமே பொற்காலமெனப் போற்றப்படும். வாழ்க! உழவனும் அவன் கலப்பையும் வளர்க வேளாண்மை.

(மூலம். ஞானசம்பந்தம்.)

ஏரோசை பாருக் கிதயத் துடிப்பு நூற்போரோசை ஓங்காரம்
போல்
ஒரு பயிராக்கி யுணவீரன் பாரிற் பெருமகனென்று நீ பேத.

3-ல் 1 பங்கு ஆரம்பப்பள்ளி ஆதாரப்பள்ளிகளாக மாற்ற யோசனை

டில்லி மகாநாட்டில் 2-வது 5 வருட கல்விக் கொள்கை நிர்ணயம்

2000 உயர்நிலைப் பள்ளிகளை பலதுறைப் பள்ளிகளாக மாற்ற யோசனை

புதி டில்லி, நவ 3—முதல் 5 வருட திட்டத்தில் கல்விக் கொள்கை பற்றிய திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் குறித்தும் இரண்டாவது 5 வருட திட்டத்தில் அதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் இன்று முடிவடைந்த மாகாண கல்வி இலாகா காரியதரிசிகள் முதல் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. மகாநாட்டிற்குத் திரு ஹுமாயூன் கபீர் தலைமை வகித்தார். 2-வது 5 வருடத் திட்டம் தயாரிக்கப்படுகையில் எந்தக் கல்வித் திட்டத்திற்கு முன் பாத்யதை அளிப்பது என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. கல்வி விஸ்தரிப்புக்கும் தரத்தை உயர்த்துவதற்கும் இரண்டாவது 5 வருட திட்டத்தில் வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று மகாநாடு கருதியது. ஆரம்பக் கல்வி கட்டத்தில் கல்வி விஸ்தரிப்பு மிகவும் முக்யமானது என்றும் 6 வயது முதல் 11 வயது வரையுள்ள பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை 1955-56-ம் வருட எண்ணிக்கையைவிட 50 சத விகிதம் ஆதரிக்கும் அடிப்படையில் ஒவ்வொரு ராஜ்யமும் தற்காலிகமானத் திட்டங்களைத் தயாரிக்கலாமென்றும் மகாநாடு அபிப்ராயப் பட்டது.

கல்வித்தரம் உயர வேண்டும்

கல்வியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு தற்போதுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 3-ல் 1 பங்கு பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற முயற்சி செய்யப்பட வேண்டுமென்றும் இரண்டாவது 5 வருட திட்ட கலாத்தில் புதியதாக திறக்கப்படும் பள்ளிகளில் 50 சத விகித பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக இருக்க வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டது. ஆரம்பப்பள்ளிகளில் மாணவர்கள் சேருவது அதிகரித்து விட்டதால் செகண்டரி கல்வி கட்டத்தில் அதிகப்படியான மாணவர்களைச் சேர்ப்பதற்கான வசதிகளை அதிகப்படுத்துவதே நோக்கமாக இருக்கவேண்டுமென்றும் ஆனால் செகண்டரி கல்வியின் தரத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும் மகாநாடு வற்புறுத்தியது. முதல் 5 வருட திட்ட காலத்தில் 500 உயர்நிலைப் பள்ளிகளைப் பலதுறைப் பள்ளிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டது. 2—வது 5 வருட திட்ட காலத்தில் மேலும் 2000 உயர்நிலைப் பள்ளிகளை பல

துறைப்பள்ளிகளாகமாற்றவேண்டுமென்றும் மிகுதியுள்ள பகுதிகளில் நூல் நிலையத்து வசதிகளை சீர்படுத்த வேண்டுமென்றும் மகாநாடு யோசனை கூறியது. இரண்டாவது 5 வருட திட்ட இறுதிக்குள் எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் உயர்தர செகண்டரி பள்ளிகளாக மாற்றுவதே இதன் முக்ய நோக்கமாகும். இந்த லட்சியம் நிறைவேற மத்திய, மாவட்ட அரசுகளுக்கிடையேயும் சர்வ கலாசாலைகள், ஸெகண்டரி கல்வி போர்டுகளிடையேயும் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுவது மிகவும் அத்யாவசியம் என்றும் மகாநாடு கோருகிறது.

ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விஷயம் பற்றியும் மகாநாடு விவாதித்தது. 2-வது 5 வருட திட்ட காலத்தில் செகண்டரி பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்த்துவதும் ஆரம்பப் பள்ளிகளில் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையை 1/3 பங்கு அதிகரிப்பதுமே நோக்கமாகும். சமூகத்தில் ஆசிரியர்களுக்குள்ள மதிப்பை உயர்த்தவும் விசேஷ நடவடிக்கைகள் எடுக்கவும் மகாநாடு பொதுவாக ஒப்புக்கொண்டது. சமூக நல திட்ட பிரதேசங்களிலும் தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ் துறைகளிலும் தற்போதுள்ள பள்ளிகளுக்கும் மாவட்ட கல்வி இலாக்காக்களுக்கும் இடையே மேலும் ஒரு முகப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் சமூகக் கல்வியைத் தீவிரப் படுத்துவதின் அவசியத்தை மகாநாடு வற்புறுத்தியது. இவ்விடங்களில் கல்விப் பொறுப்பை கல்வி இலாகா ஏற்க வேண்டுமென்று சமூக நலதிட்ட நிர்வாகத்தின் சார்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

செகண்டரி கல்வி திட்டத்திற்குப்பின் அதாவது சர்வகலாசாலை கல்வி முறையை பரப்புவதற்குப்பதில் அதை செய்வதில் மேலும் கவனம் செலுத்த வேண்டுமென்று மகாநாடு கருத்திற் கொண்டது.

(பக்கம் 20ன் தொடர்ச்சி)

சங்கீதம் இன்றியமையாததென்றும் ஆதலின் ஒவ்வொரு குடும்பத்திலும் சங்கீத ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்.

சங்கீதம் இப்பொழுது நல்ல நிலையிலில்லை என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் சிறு அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. இன்னும் எவ்வளவோ செய்யப்படவேண்டும். ஐரோப்பா நாட்டில் சங்கீத ஆர்வத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இந்தியாவிற்கு அது பொருந்தாதென்றும் நாடு சுதந்திரம் அடைந்து மக்கள் பிரதிநிதிகள் ஆட்சியில் அமர்ந்துள்ள சமயத்தில் சங்கீதம் மக்கள் வாழ்வில் இடம்பெற வேண்டுமென்றும் கூறினர்.

பாடசாலைகளில் தேர்வு பரீட்சைகள் நீடிக்கும்

மிடில் ஸ்கூல்களிலும் ஹைஸ்கூல்களிலும் வருஷாந்திர தேர்வுப் பரீட்சைகளை ரத்துச் செய்யும் உத்தேசம் இல்லை என்று கல்வி மந்திரி ஆஜாத் லோக் சபையில் கேள்வி நேரத்தில் அறிவித்தார்.

நாட்டில் ஹிந்தியை தேசிய மொழியாக்குவது எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதை ஆராய ஒரு கமிஷனைத் தக்க தருணத்தில் சர்க்கார் நியமிக்கும் என்று பார்லிமென்டரி காரியதரிசி டாக்டர் மனமோகனதாஸ் தெரிவித்தார்.

காந்தீயமே உலகுக்கு சாந்தி தரும்

ராஷ்டிரபதி அறிவுரை

காந்திஜி போதித்த சத்தியம் அஹிம்சை என்ற கொள்கைகளை உலகம் முழுவதும் பின்பற்றினால்தான் உலக சமாதானம் நிலைக்கும். ஆயுதங்கள் மூலம் நிலைக்காது. இந்த போதனைகளில் உலகம் போதிய கவனம் செலுத்தாததால் தான் சமாதானம் கானல் நீராக இருக்கிறது. பரஸ்பரம் ஒத்துப்போதல் போதுமென்ற மனம், தன் நலனைப்போல பிறர் நலனைப் பேணுதல் ஆகியவையே காந்தீய போதனைகளின் அடிப்படையாகும். இன்றைய இந்தியாவில் காந்தீயக் கொள்கைகளைக் கையாள முடியுமா? முன்பை விட இப்பொழுதுதான் இவற்றைக்கையாள அதிக வாய்ப்பு இருக்கிறது இப்பொழுதுபோல் முன்பு நாம் துறப்பதற்கு நம்மிடம் எதுவும் இல்லை இன்றைய இந்தியாவின் பிரச்சனைகளைத் தீர்க்க காந்திஜியின் போதனைகளை ஒவ்வொரு இந்தியரும் கையாண்டு பார்க்க வேண்டும்.

இதன் மூலம் இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்ப்பதுடன், உலக சமாதானத்திற்கும் உதவியவர்கள் ஆவோம்.

ஹிந்தியால் இதர மொழிகளுக்கு ஆபத்தில்லை

(ராஷ்டிரபதி)

ஹிந்தி பரப்புவதால் பிராந்திய மொழிகளுக்கு ஆபத்து ஏற்படுமென்ற பயம் தேவையில்லை. ஹிந்திக்கும் பிராந்திய மொழிகளுக்கும் தனித்தனி துறைகள் உள்ளன. ஹிந்தி பேசப்படாத பகுதிகளில் ஹிந்தி தேசிய விவகாரங்களுக்கு மட்டும் உபயோகிக்கப்படும். இதர துறைகளில் பிராந்திய மொழிகள் இயங்கலாம்

சங்கீதம் கட்டாயப் பாடமாக்கப் படவேண்டும்

ஸ்ரீ கேஸ்கர் ஆலோசனை :

எல்லா ராஜ்யங்களிலுள்ள பள்ளிகளிலும் சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் சமன் செய்யப்பட்ட வாழ்வுக்கு

(பக்கம் 19ல் பார்க்க)

செகண்டரி பரிக்ஷை மார்ச் 1955

1954 செப்டம்பரில் பரிக்ஷைக்குச் சென்ற அயர்கிரேடு ஆசிரியர்கள் 1955 மார்ச் பரிக்ஷைக்குச் செல்லலாம்.

1954 செப்டம்பரில் செகண்டரி T. S. L. C. பரிக்ஷைக்கு ஆஜரானவர்களும் 1955 மார்ச் பரிக்ஷைக்கு குறிபிட்ட காலத்தில் விண்ணப்பிக்க முடியாதவர்களுமான அயர்கிரேடு ஆசிரியர்களும் 1955 மார்ச் பரிக்ஷைக்கு உட்காரலாம் எனவும் அது குறித்த விண்ணப்ப பாரங்கள் விரைவில் அனுப்பப் பெறவேண்டுமெனவும் Dis 3997/54 dated 19-7-54 and 41-6/54 dated 27-7-54 என்னும் கல்வி இலாகா டைரக்டர் அறிக்கைகள் கூறுகிறது.

(பள்ளி மாணவர்கள்)

1. அரசியலார் தேர்வு
8-ம் வகுப்பு மார்ச் 1955

டி தேர்வு 1955-ம் ஆண்டு மார்ச்மீ 29உ முதல் 31-ந் தேதி வரை நடைபெறும் விஷயங்கள் ;

1 மொழி
2 கணிதம்
3 சமூக அறிவு நூல்
4 விஞ்ஞானம்
5 (ஆங்கிலம்) இஷ்டபாடம்

விஞ்ஞானம்: 7, 8 வகுப்புகளில் படித்ததில் தேர்வு.

சமூக அறிவு நூல்: 8-ம் வகுப்பில் படித்ததில் மாத்திரம்தான் தேர்வு.

குறிப்பு : சென்ற ஆண்டில் சரித்திரம், பூகோளம், சிவிக்ஸ், எழுதியவர்கள் கூட சமூக அறிவு நூலில்தான் தேர்வு செய்யப்படுவர்.

1942 முதல் 1944 முடிய 8-ம் வகுப்புத் தேர்வு அடைந்தவர்கள் மார்ச் 1956க்குப்பின் ஆங்கில பாடத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1956 மார்ச் முதல் சமூக அறிவு நூல் தேர்விற்கு 7, 8 வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் உண்டு.

தேர்வுக் கட்டணம்: எல்லா மாணவர்களுக்கும் ரூ. 2-8-0 ஆங்கில தேற்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்டு ரூ. 0-8-0 செலுத்த வேண்டும்.

தலைமை ஆசிரியர்கள் தேர்விற்கு அனுப்பப்படும் மாணவர்களின் பட்டியல்களை டிப்டி இன்ஸ்பெக்டர் தணிக்கை செய்து அரசியலார் தேர்வுக் கமிஷனரின் காரியதரிசிக்கு 20-12-'54 க்குள் கிடைக்கும்படி முன்னதாகவே அனுப்பவேண்டும்.

8-ம் வகுப்புத் தேர்வு
(மற்றோர்கள்)
Private Candidates

தற்போது அங்கீகாரமான பள்ளிகளில் படிக்காதவர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ளலாம். ஒரு பள்ளியிலும் படித்திருக்கத் தேவையில்லை. ஆனல் 1-4-55க்குள் 15வயது பூர்த்தியாயிருக்க வேண்டும். விண்ணப்பத்திற்குபின்புறம்மேற்கண்டவாறுடிப்டி இன்ஸ்பெக்டர் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உறுதி கூறவேண்டும் இஷ்டபாடமாகிய ஆங்கிலத்துடனும் இல்லாமல் இதர பாடங்களுக்கு மட்டும் உட்காரலாம். (அங்கீகாரமான பள்ளியின்மூலம் இத்தேர்வில் உட்கார்ந்து தேர்வு அடையாதவர்களும் அனுமதிக்கப்படுவர்.

1942க்கு பின் கல்வி இலாகாவால் E. S. L. சர்டிபிகேட் பெற்றவர்களும், 1945லும் அதற்கு பிறகும்

இஷ்டபாடமாகிய ஆங்கிலத்தைத் தவிர இதர 3 கட்டாய பாடங்களிலும் தேர்வு அடைந்தவர்கள் இவ்வாண்டு (1955 மார்ச்) மட்டும் எல்லா பாடங்களுக்கும் உட்காரலாம் விண்ணப்பத்துடன் E. S. L. சர்டிபிகேட்டையும் அனுப்ப வேண்டும்.

1942க்கு முன் கல்வி இலாகாவால் வழங்கப்பட்ட E. S. L. சர்டிபிகேட் பெற்றவர்களும் 1942 முதல் 1952 வரை அரசியலார் நடத்திய தேர்வில் வெற்றி பெறாதவர்களும் இவ்வாண்டு பள்ளியில் படிக்காமல் இருப்பார்களானல் விஞ்ஞானத் தேர்விற்கும் உட்காருவதாக விண்ணப்பத்தில் அறிவித்துவிட்டு பிறகு வேறுவித முடிவிற்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும்.

மேற் குறிப்பிட்ட எல்லோரும் ஆங்கிலத் தேர்வில் கலந்துக்கொள்ள தகுதி உண்டு. விருப்பமில்லாதவர்கள் கலந்துக்கொள்ள தேவையில்லை.

கட்டணம்:— 1935க்கு முன் கல்வி இலாகாவால் வழங்கப்பட்ட E. S. L. சர்டிபிகேட் உடையவர்களுக்கும், அங்கீகாரம் பெற்ற பள்ளியில் வாசித்த அரசியலார் தேர்வில் வெற்றிபெறாமல் தற்பொழுது தனிப் பட்டமுறையில் தேர்வில் கலந்து கொள்பவர் ரூ 2-0-0 கட்ட வேண்டும். விஞ்ஞானத்தேர்தலில் கலந்து கொள்பவர்களுக்கு ரூ 2-8-0

ஒருகாலும் 8-வது படிக்காதவர்கள் (பள்ளியிலே படிக்காதவர்கள்) விஞ்ஞானத்துடன் ரூ. 5-0-0

விஞ்ஞானத் தேர்விலிருந்து விலக்கு உடையவர்களுக்கு ரூ 4-0-0

குறிப்பு:— 1953, 1954-ல் தேர்வில் கலந்துகொண்டவர்களும், புதியதாக இவ்வாண்டுத்தேர்வில் கலந்து கொள்பவர்களும், ஒரு பள்ளியிலும் இவ்வாண்டு படிக்காதவர்களாயின் ரூ. 5-0-0 கட்டணம் கட்ட வேண்டும். ஆங்கிலத்தேர்வில் மாத்திரம் கலந்து கொள்பவருக்கு ரூ. 0-8-0

கட்டணத் தொகையை சென்னையில் இருப்போர் ரிஸர்வ் பாங்கிலும்,வெளியூர்களிலிருப்போர் தாலுக்கா கஜானுக்களிலும் செலுத்தி ரசீது பெற வேண்டும்.

விண்ணப்ப பாரங்கள் ஜில்லா கல்வி அதிகாரி ஆபீசிலும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸிலும் தான் கிடைக்கும்.

விண்ணப்பங்களை தாங்களே பூர்த்தி செய்து பணம் கட்டியதற்கான ரசீது முதலிய தேவையான எல்லாசர்டிபிகேட்டுகளுடன் அஞ்சல் உறையிலிட்டு, உறையின்மேல் 8-ம் வகுப்புப் புதுத்தேர்வு 1955 கலந்து கொள்ளுமாறு தனிப்பட்ட முறையில் கலந்துக்கொள்பவர்,

அரசியலார் தேர்வுக் கமிஷனரின் காரியதரிசி கதிடரல் போஸ்ட் சென்னை-6. என முகவரி எழுதி 30-11-1954க்குள் கிடைக்கும்படி நான்கு தினங்கள் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

மேற்குறிப்பிட்டவர் ஒவ்வொருவரும் தனித்தனியே நேராக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

ஹால் டிக்கட் 1955 மார்ச் மாதம் அனுப்பப்படும். அதில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு, அச்சீட்டுடன் செல்ல வேண்டும்.

இதர விஷயங்களுக்கு 20-10-54 போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட் பார்ட் 1B. பக்கங்கள் 484-485ஐப் பார்க்கவும்.

ஜென்மாந்திரம்

சமூக நாடகம்

முதற் காட்சி.

இடம் : சிறைச்சாலை
காலம் : மாலை

பாத்திரங்கள் வாலிபக்கைதி, கிழக்கைதி.

(இரண்டு கைதிகளும் வேலை செய்த களைப்போடுவருகிறார்கள்)

வாலிபக்கைதி : அட ஆண்டவனே இனி என் வாழ்வில் சுகமென்பதே கிடையாதா ? என் கதி இதே கதிதானா?

கிழக்கைதி : தம்பீ! ஏன் வருந்துகிறாய்?

வா.கைதி: இன்று கடுமையான வேலை. என் முதுகெலும்பை முறித்துவிட்டான் அந்தப்பாவி.

கி. கைதி : நான் இந்த ஜெயிலுக்கு வந்து இன்றைக்கு வேலை செய்ததைப்போல் நான் என்றும் இப்படி செய்ததில்லை. (நெற்றி வியர்வையை துடைக்கிறான்)

வா. கைதி : ஐயா ! தங்களுக்குப் பாடத் தெரிந்தால் ஏதாவதொரு பாட்டு பாடுங்கள். சற்று நேரம் நிம்மதியாக இருக்கலாம்.

கி. கைதி : தம்பீ ! பாடல்களில் போதிய பயிற்சி இல்லாவிட்டாலும் ஓரளவு பயிற்சி எனக்கு இருக்கிறது. அதுவும் இந்த நிலையில் நான் பாடவா?

வா. கைதி : பாட்டு என்றால் எனக்கு உயிர். அதுவும் பாரதியார் பாடல்கள் என்றால் எனக்கு அலாதி இன்பம். நமது கஷ்டத்தை மறந்து சிறிதுநேரம் இன்பமாக இருக்கலாமென்றுதான் உங்களைக்கேட்கிறேன்.

கி. கைதி : (அலட்சியத்துடன்) பாடுவதா ! சிரிப்பதா !! அழுவதா !!! என்று எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. (சிறிது நேரம் பொருத்து) நம்மைவிடுதலைக் செய்யக் கூடாது ;

வா. கைதி : ஏன் ? என்றைக் காவது ஒரு நாள் நாம் விடுதலைப் பெற்று வீட்டிற்குச் செல்ல வேண்டியவர்கள்தானே ! ஒவ்வொருவரும் எப்பொழுது விடுதலைகிடைக்குமோ என்று தவியாய் தவிக்கிறார்கள். இந்நிலையில் உங்கள் போக்கு விசித்திரமாக இருக்கிறதே.

கி. கைதி ! தம்பீ ! விடுதலைப் பெற்று விட்டால் மட்டும் திருடன் என்ற பட்டம் மறைந்து விடுமா ! மக்கள் நம்மை எள்ளி நகையாடுவார்கள். ஏளனமாக பேசுவார்கள். சமூகம் நம்மை உதாசீனமாக ஒதுக்கும். (அலட்சிய சிரிப்புடன்) தம்பீ ! ஒவ்வொருநாளும் சமூகத்தில் திருட்டு நடக்கிறது. நடந்து கொண்டே வருகிறது. பலவிதத்தில், பலதுறையில் பலரும் செய்கிறார்கள். நாம் யார் யார் பெரியமனிதர் படித்தவர் என்று நினைக்கிறோமோ அவர்கள்தான் பெரிய திருடர்களாக இருக்கிறார்கள். அது நம்போன்ற ஏழைகளுக்குத் தெரியாது. சட்டம் திருடியவனைத்தான் தண்டிக்கிறது. ஆனால் திருடுவதற்கு

காரணமாக இருந்தவனை தண்டிப்பதில்லை. நாம் விடுதலைப் பெற்று சமூகத்தில் கஷ்டப் படுவதைக் காட்டிலும் இங் கேயே இருந்துவிட்டால் நல்ல தென்று எனக்கு தோன்றுகிறது.

வா. கைதி: ஐயா! சமூகத் தில் ஒருவன் திருடனைக மாறி விட்டால் அவன் மீண்டும் நல்ல வனைக மாற முடியாதா?

கி. கைதி: ஒருகாலம் முடி யாது. எனக்கு என்னமோ அதில் நம்பிக்கையில்லை. திருடன் நல்லவனைக மாறினாலும் இப்பா ழும் சமூகம் அவன் உயிர் உள்ள வரைக்கும் திருடனைகவே கருதும்.

வா. கைதி: ஏன் முடியாது? மனிதனால் முடியாதது ஒன்றுமே இல்லை. நெப்போலி யன் என்னும் மஹாவீரன் முடியாது என்ற சொல் எனது அகராதியிலே இல்லை என ஆணித்தரமாக கூறினன். அவன் சொல்லை நாம் மறக்காமல் தன்னம்பிக்கையோடும், முயற்சி யோடும் காரியத்தை நடத்தினல் நாம் வெற்றி பெறுவது திண்ணம்.

கி. கைதி: எல்லாம் தலைவிதி. விதியை வெல்ல நம்மால் முடி யாதப்பா.

வா. கைதி: நீங்கள் இன்னொரு முறை தலைவிதி என்று சொல் லாதீர்கள். இந்தக்காரியம் ஆகாது, கைகூடாது, என்று தெய்வமே விதித்தாலும்சரி முயற்சியாளன் தனது மெய் வருந்தப் பாடுபட்டால் உழைப்பிற்கேற்ற கூலி தானே கிடைக்கும். முயற்சியாளன் விதி யும் புறம் காண்பான். மார்க் கண்டன் தன் அருந்தவத்தால் விதியை வென்றன். சாவித்திரி தன் விடாமுயற்சியால் எமன் கையிலிருந்த தன் கணவன் உயிரை மீட்டாள். இது யோகி சுத்தானந்த பாரதியாரின் பொன் மொழிகள். விதி தன் ஆயிரம் அம்புகளை அடுக்கடுக்காக அனுப் பினாலும் முயற்சியாளனை அசைக் கமுடியாதய்யா! முதலில் நீங்கள் பாடுங்கள். உங்கள் பாட்டைக் கேட்க எனக்கு மிகுந்த ஆசை யாக இருக்கிறது.

கி. கைதி: தம்பி! உன் பேச்சு என் மனதைக் குளிரச் செய்து விட்டது. உன் விருப்பப்படியே நான் பாடுகிறேன். (பாடுகிறன்)

(சன்மார்க்கத் தியாகம் எந்நா ளும் வெற்றி) என்ற மெட்டு:

அறிவாலே இன்பம் அடைந்
திடுவோமே அகிலம் மீதிலே
அணையாத ஜோதி வீசிட
வேண்டாம்.
அறிவின் ஆற்றலால் —நல்ல
(அறி)

1 செந்தமிழ் வரை
சேவை புரிந்தார் நம் திரு
பாரதியார்
காளோடு தினமும் வளர்ந்திட
வேண்டும்
நல் மிகும் தமிழ் மொழியே
(அறி)

2 பூங்குயில் பாட்டு புவியினில்
—ஓங்க
புகழுடன் இசைத்தவராம்
புதுமலர் பூவே வீசிடும்
மணமே
செந்தமிழ் வாசகமே (அறி

இன்பத்துளியே இதயப்
பெருக்கே
இன்புறும் தேன் மொழியே
உன்னை வையகம் மீதில்
வளர்ந்திட செய்தார்
நம் கவி பாரதியார் (அறி)

(பாட்டு பாடிய பிறகு) அது ...ரி தம்பீ நீ இந்தச் சிறுவயதில் ...ன் இந்த சிறைக்கு வந்தாய்? ...ன் தான் வயிற்றுப் பிழைப்பிற் ...ாக வழி தெரியாமல் திருடி ...ட்டு இப்புண்ணிய இடத்திற்கு ...ந்துசேர்ந்தேன். உன்னைப்பார்த் ...ால் நல்லவனாக தோன்று ...றதே நீ இந்தச் சிறுவயதில் ...வ்வளவு பெரிய தண்டனை ...டைய நீ என்ன குற்றத்தை ...செய்து விட்டாய்.

வா. கைதி: என் குற்றத்தை அறிந்து தங்கள் மனம் கலங்க் வேண்டாம். என்றைக்காவது ஒரு நாள் பார்த்துக்கொள்ளலாம்

கி. கைதி: என்மனம் என்னமோ நீ செய்த குற்றத்தை அறிய ஆசைப் படுகிறது. இன்றைய பொழுது உன் கதையால் தான் கழிக்க வேண்டும்.

வா. கைதி: உங்கள் விருப்பத்தை நான் ஏன் தடுக்க வேண்டும். இப்படி வந்து உட்காருங்கள். (இருவரும் உட்கார்ந்த பிறகு தன் கதையை சொல்லுகிறான்.)

ஐயா! எனது சொந்த ஊர் நாகப்பட்டினம். என் தந்தை ஒரு பெரிய பணக்காரர். காருண்யமும் ஊதாரித்தனமும் எளிதில் ...ாரையும் நம்பிவிடுவது முதலிய குணங்கள் அவருக்கு சொந்தம். இந்த குணங்களுக்கும் செல்வத்திற்கும்தான் கீரிக்கும் பாம்பிற்கும் உள்ள சினேகிதமாச்சே! அவர் முழு நேரம் உழைத்துச் சம்பாதித்தாலும் அவர் கையில் ஒரு பைசாகூட தங்குவதில்லை. இதில்வேறு குதிரை பந்தயம் என்றால் அவருக்கு உயிர் ஒரு நாள் அவர் கட்டிய ரூபாய் போய் விட்டது. அதே கவலையாலும், ஏக்கத்தாலும் படுத்த படுக்கையை விட்டு எழுந்திருக்கவே முடியவில்லை.

கி. கைதி: அப்புறம் ....

வ. கைதி: எஞ்சிய நகை, நட்டுகளுடன் என் தாய் குடித்தனம் நடத்தி வந்தாள். செட்டுக் குடித்தனம் நடத்துவதில் என் தாய்க்கு ஈடு என் தாய் தான். நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமாக தரித்திரம் எங்கள் குடும்பத்தோடு வளர்ந்துக் கொண்டே வந்தது. நாங்கள் நல்ல நிலையில் இருக்கும்போது அன்பும் மதிப்பும் காட்டிய எங்கள் பந்துக்கள் அன்று எங்களை விரட்டினார்கள், எங்கள் ஏழ்மையைக் கண்டு எளனம் செய்தார்கள். எங்கள் தாய் சொற்ப தொகைக்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு எளிய வாழ்க்கை ஆரம்பித்தாள். உடல் தளர்ந்து, உள்ளம் சோர்ந்து உடல் தள்ளாடிய எங்களை என் தாய் மாமனாகிய திவான் பகதூர் திம்மையா பிள்ளை வீட்டிற்கு என் தாய் அழைத்துச் சென்று எங்களை காப்பாற்றும்படி மன்றாடினாள். எங்கள் ஏழ்மையைக் கண்ட தாய் மாமன் புறக்கணித்தார்.

திடீரென்று எங்கள் குடும்பத்தின் மீது கொடூரமான மரணக் காற்று படர்ந்து கொண்டே வந்தது. ஈவு இரக்க மற்ற சாவு பலி பீடத்திலே முதலில் பலியானவள் என் தங்கை உமா. நாங்கள் எல்லோரும் லபோ லபோ என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொள்ள என் அருமை உமாவை மரணம் பரித்துக் கொண்டு சென்று விட்டது. எங்கள் சோக நாடகம் இதோடு முடியவில்லை. என் தங்கை இறந்த துக்கம் கூட ஆர்வதற்குள் அம்மா! கண்ணே; நீ எங்கே அம்மா இருக்கிறாய் என்று புலம்பிக் கொண்டே படுத்த படுக்கையாக இருந்த என் தந்தையும், என் தங்கை சென்ற காலடிகளைப் பின் பற்றிச் சென்று விட்டார். மகன் இறந்த துக்கத்தை தாளாமல் என் கிழப்பாட்டியும் மரணத்தின் கோரபசிக்கு இரையாகி விட்டாள். என் வாழ் நாளில் மறக்க முடியாத எத்தனையோ சம்பவங்கள் என் மனம் இறுகப் பூட்டி வைத்திருக்கிறது. எந்த மூன்று ஜீவன்களுக்கு அடைக்கலம் கொடுத்து பிறகு மரணத்தின் கையில் ஒப்படைத்து விட்டதோ அதே படுக்கையில் அன்றொரு நாள் என் தாய்........

(தொடரும்)

யார் தொண்டன்

1 தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்க உற்றவன்
சண்டை போடும் மக்களை
சரசமாக்கி வைக்கவே
(தொண்டு)

2 தீர வாழ்வு சொல்லுவான்
தீமையாவும் வெல்லுவான்
ஈரமற்ற செய்கைகள்
வீரமென்றால் பொய்யென
(தொண்டு)

3 சேவை செய்யும் நல்லவன்
செம்மை கண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச் சென்று சேருவான்
(தொண்டு)

4 அன்பினைப் பெருக்குவான்
ஆசையைச் சுருக்குவான்
துன்பமுற்றரோடும்
துணையிருக்கத் தவறிடான்
(தொண்டு)

5 பணிவறிந்த தொண்டனே
பரம ஞானம் கண்டவன்
தணிவுமிக்க சொல்லினால்
தரணியெங்கும் வெல்லுவான்
(தொண்டு)

6 கூவிடாமல் ஓடுவான்
குறைகள் தீர்க்க நாடுவான்
ஏவிடாத தொண்டனே
எதிலும் வெற்றிக் கண்டவன்
(தொண்டு)

7 கடவுளென்ற சக்தியைக்
கருதிடாத பித்தரின்
மடமை நீக்கும் சேவைதான்
மனிதர்க்கின்று தேவையாம்
(தொண்டு)

8 பூமிதான போதகன்
பூஜிதன் வினோபா
புதுமைமிக்கத் தொண்டுதான்
போற்றவேண்டும் இன்று நாட்
(தொண்டு)

Edited and Published by A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint Street, Madras-1.